தனிச்சுற்றுக்கு
நன்கொடை
ரூ-20

டிசம்பர் 2014
பருவம் 1
புனல் 3

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

## பேராசிரியர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன் சிறப்பிதழ்











நமது நாட்டில் நடைபெறுகிற முட்டாள் தனங்களிலும், பச்சை அயோக்கியத்தனங்களிலும் தலைசிறந்த, முதல்தரமான காரியங்களில் முதலாவது காரியம் என்னவென்றால், பகவத் கீதை எனும் ஒரு காட்டுமிராண்டி, அயோக்கியத்தனம் கொண்ட நூலை, விஷயத்தை, பிரச்சாரம் செய்வதும், பரப்புவதுமாகும். அதன் வண்டவாளத்தை வெளியிட ஆசைப்படுகிறேன். அது விஷயமான ஆராய்ச்சி உள்ளவர்கள், அதில் உள்ள மடமையையும் நமது சமுதாயத்திற்குக் கேடான விஷயங்களை உணர்ந்தவர்கள் அருள்கூர்ந்து விடுதலை பத்திரிகைக்கு எழுதி அனுப்ப வேண்டுகிறேன்.

தோழர் பெரியார் - விடுதலை - 16.11.1973

ஜாதியையும், வருணாசிரம தருமத்தையும் பரப்புவதற்கு என்றே உள்ள இராமாயணம், பாரதம், கீதை, மனு மற்றும் உள்ள பல நூல்களை அரசாங்கம் பறிமுதல் செய்ய வேண்டும். இதனைப் பரப்பும் திரு. இராச கோபாலாச்சாரி முதல் சத்கதாகாலட்சேபம் செய்யும் பார்ப்பனர் மற்றும் அனைவர் மீதும் ஜாதியை, தீண்டாமையை நியாயப்படுத்திப் பரப்பும் குற்றம் புரிவதற்காக நடவடிக்கையை எடுத்துத் தண்டிக்கவேண்டும்.

தோழர் பெரியார் - விடுதலை - 21.4.1969



டிசம்பர்
24

“இராமாயணம்
பாரதம், கீதை,
நூல்களை அரசாங்கம்
பறிமுதல் செய்யவேண்டும்! ”



டிசம்பர்
6

நம்முடைய முன்னோர்கள் இந்த மதத்தில் இருந்தார்கள் என்பதற்காகவே நாமும் அந்த மதத்தில் நீடித்திருக்க வேண்டும் என்று பிறவி முட்டாள் மட்டுமே சொல்வான். எந்த சாதாரண மனிதனும் மதம் மாறக் கூடாது என்ற கருத்தை ஒப்புக் கொள்ள மாட்டான். இதுபோன்ற வாதத்தை முன்னிறுத்தும் எவரும் வரலாற்றைப் படிக்கவே இல்லை என்பதுதான் உண்மை.

நம்முடைய மூதாதையர்களின் மதமே பின்பற்றப்பட வேண்டும் என்றால், இந்திய மக்கள் இந்து மதத்தைக் கைவிட்டுவிட்டு பவுத்தத்தை ஏன் தழுவினர்? வேத மதத்திலிருந்து ஏன் தங்களை விடுவித்துக் கொண்டனர். எனவே, இந்து மதம் என்பது நமது மூதாதையர்களின் மதம் அல்ல; இது, நம்மீது திணிக்கப்பட்ட அடிமைத்தனமே...மிகத் தெளிவாக, மதமாற்றத்தின் மூலமே சமூக சமத்துவத்தைப் பெற முடியும். இது உண்மை எனில், இந்த எளிமையான வழியை நீங்கள் ஏன் பின்பற்றக் கூடாது?

“இந்து மதம்
என்பது நமது மூதாதையர்களின்
மதம் அல்ல; இது, நம்மீது
திணிக்கப்பட்ட அடிமைத்தனமே!”

தோழர் அம்பேத்கர் 30, 31 - 05-1936
இயோலா மாநாடு

**மத்தியில் பெரும்பான்மையோடு பா.ஜ.க. ஆட்சியைப் கைப்பற்றிய பிறகு, இந்து மதவாதத்தை மக்களிடையே கொண்டு செல்வதில் மிகத் தீவிரமாக செயல்படத் தொடங்கியுள்ளது ஆர்.எஸ்.எஸ்.**



# காவிமயமாகும் இந்தியா... ஓர் எச்சரிக்கை!!!

## SAFFRONISATION OF INDIA ... A WARNING!!!


மத்தியில் பெரும்பான்மையோடு பா.ஜ.க. ஆட்சியைப் கைப்பற்றிய பிறகு, இந்து மதவாதத்தை மக்களிடையே கொண்டு செல்வதில்மிகத் தீவிரமாக செயல்படத் தொடங்கியுள்ளது ஆர்.எஸ்.எஸ். ஆர்.எஸ்.எஸ்-இல் இருந்து பா.ஜ.க.-விற்கு அனுப்பி வைக்கப்பட்ட, பா.ஜ.க. வின் பொதுச் செயலாளர் முரளிதர் ராவ், "இப்போது பா.ஜ.க. ஆளும் கட்சி. எங்கள் கருத்தியலை இப்போது உலகிற்குத் தெளிவு படுத்தாமல் வேறு எப்போது செய்யப் போகிறோம்" என்று கூறியுள்ளார்.மேலும் "ஆர்.எஸ்.எஸ்-க்கு ஒரு அரசு தேவை இல்லை. ஆர்.எஸ்.எஸ்.-இன் சித்தாந்தம் தான் முக்கியமானது. அதன் செல்வாக்கு மற்றும் நாட்டின் விதியை வடிவமைக்கும்திறன்2025-ஆம் ஆண்டிற்குள் (ஆர்.எஸ்.எஸ். ஆரம்பித்து 100 ஆண்டுகள்) போதுமான அளவில் நிருபிக்கப்படும்" என்றார். தற்போது முரளிதர் ராவ் தான் தமிழக பா.ஜ.க. பொறுப்பாளர். "தமிழகத்தில் பா.ஜ.க.-வை வலுப்படுத்த சிறப்பான செயல்திட்டங்களுடன் தீவிரமாக செயல்பட உள்ளோம்" என்று அ.தி.மு.க. தலைவர் ஜெயலலிதா கைதின் போது கூறினார்.

டில்லியில் ஆர்.எஸ்.எஸ்.-இன் விரிவாக்கத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் ராஜீவ் டுலியின் (Rajiv Tuli) அலுவலகத்தில் தொலைபேசி அடிக்கடி ஒலிக்கிறது. அழைப்பவர்களில் பெரும்பாலானவர்கள் அமைப்பில் எப்படி சேர வேண்டும் என்று தான் கேட்கிறார்கள். ஒரு பொறியாளர் அவரது ஆன்லைன் விண்ணப் பத்தின் நிலையைப்பற்றித் தெரிந்து கொள்ள அழைக்கிறார். ராஜீவ் டுலி அவரது பின்னணியை சரிபார்க்க ஒருசில கேள்விகளைக் கேட்கிறார். பின், தினமும் அதிகாலையில் உடல்பயிற்சி, பிரார்த்தனை, ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் ஹெட்கேவார் (Hedgewar) மற்றும் அவருக்குப் பின் தலைவரான கோல்வால்கர் (Golwalkar) ஆகியோரின் கருத்துகளை எடுத்துக் கூறும் நிகழ்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கிய அதிகாலை ஒன்றுகூடலில் பங்கேற்கவும்; ஷாகாவில் சேருவதற்காகவும் ஆர்.எஸ்.எஸ் தன்னார்வலர்கள் தினமும் அதிகாலையில் உங்கள் வீடுகளின் கதவுகளைத் தட்டுவார்கள் என்று ராஜீவ் அப்பொறியாளரிடம் தெரிவிக்கிறார். இவ் வுரையாடலுக்குப் பின், அப்பொறியாளரைத் தெற்கு தில்லிமால்வியா நகர் பகுதியில் உள்ள ஷாகாவில் சேருமாறு சொல்கிறார்.

ராஜீவ், "ஒவ்வொரு மாதமும் அமைப்பில் சேருவதற்காக 5000 விண்ணப்பங்கள் வருகின்றன. 2012 ஆம் ஆண்டில், ஆர்.எஸ்.எஸ் அரசியல் பிரிவான பா.ஜ.க. மத்திய அரசியலில் இல்லாத போது, 200- க்கும் குறைவான விண்ணப்பங் களைத் தான் பெற்றோம். ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர் பட்டியலைப் பராமரிப்பதில்லை; மாறாக ஷாகாக்களின் எண்ணிக்கையைத் தான் விரிவாக்கத்தின் அளவீடாகக் கொள்கிறது. ஜீலை 2014-லிருந்து நவம்பர் மாதம் வரை ஷாகாக்களின் எண்ணிக்கை 39,000 த்திலிருந்து 42,000 த்திற்கும் மேல் சென்றுவிட்டது (10% உயர்வு)" என்று கூறுகிறார்.

### உறுப்பினர் சேர்க்கை மற்றும் இணையதள செயல்பாடுகள்

ராஜீவ், "எந்த கட்சி ஆட்சியிலிருந் தாலும், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் உறுப்பினர்களை இருமடங்காக்க வேண்டும் என்பது தான் எங்களுக்கு இலக்கு" என்றார். ஆர்.எஸ்.எஸ் தலைவர் மோகன்பகவத் ஆக்ராவில் நவம்பர் மாதம் நடைபெற்ற ஓர் மூன்றுநாள்இளைஞர்கள் பயிற்சி முகாமில், ஒருகோடி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பதும் ஒரு லட்சம் ஷாகாக்கள் அமைக்க வேண்டும் என்பதும் தான் நம் இலக்கு என்று




Rashtriya Swayamsevak Sangh Android app

பேசியுள்ளார். சங் இதற்காக தீவிரமான முயற்சிகளை எடுத்து வருகிறது. தினமும் நடக்கும் இந்த ஷாகாக்களுக்கு மாறாக பெருநகரங்களில் இருக்கும் அய்.டி துறையினர் மற்றும் நிர்வாகத் துறையினருக்கென்று வாரமொரு முறை நடக்கும் அய்.டி.மிலன்கள் (IT Milan) ஆர்.எஸ்.எஸ்.-இன் புதிய அவதாரமாகும். தில்லியில் 36 அய்.டி. மிலன்களும், பெங்களூரில் 100-க் கும் மேற்பட்ட அய்.டி. மிலன்களும் செயல்பட்டு வருகின்றன. இணையத்திலும் சங் மற்றும் அதன் துணை அமைப்புகள் தீவிரமாக செயல்படுகின்றன.நிறைய மொபைல் அப்ளிக்கேஷன்களும் ஆன்லைனில் உள்ளன.

அதில் அவர்களின் 35 துணை அமைப்புகளைப் பற்றிய விரிவான விளக் கங்களும், வாரா வாரம் மாற்றப்படும் காணொளி களும், ஆடியோக்களும், ஆர்.எஸ். எஸ்-இன் நிறுவனரான ஹெட்கேவாரின் கருத்து களிலிருந்து தற்போது ஆர்.எஸ்.எஸ் தலைவரான மோகன் பகவத்தின் கருத்துகள் வரை நிறைய தகவல்கள் உள்ளன.

மேலும் உறுப்பினராக சேரவும் அதிலேயே வசதி இருந்தது.அதில்நாம் நம் எண், மின்னஞ்சல் முகவரி, மாநிலம், மாவட்டம், பகுதி போன்ற விவரங்களைக் கொடுத்து பதிவு செய்யலாம். பதிவு செய்தவுடனே Automatic Responder மூலம் ஓர் மின்னஞ்சல் அனுப்பப் படுகிறது.அதில் அப்பகுதி பொறுப்பாளரின் அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, பெயர் ஆகிய விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். நம் விவரங்களும் அவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### அரசியலில் ஆர்.எஸ்.எஸ்

மத்தியில் பா.ஜ.க. ஆட்சியிலிருப்பதால் சங் தனது கருத்துகளை அரசின் உதவியுடன் பிரச்சாரம் செய்கிறது. அக்டோபர் 4 அன்று தேசியசெய்திஒலிபரப்புநிலையமான தூர் தர்ஷனில், ஆர்எஸ்எஸ் தலைவரின் விஜயதசமி பேச்சு நேரடி ஒளிபரப்பான நிகழ்வு இதற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இந்தியாவின் மிகப் பெரிய பொது ஒலிபரப்பான தூர்தர்ஷனையும் அகில இந்திய வானொலியையும் உள்ளடக்கிய ப்ரஸார் பாரதியின் (Prasar Bharathi) தலைவராக ஆர்.எஸ்.எஸ் -க்கு மிகவும் நெருக்கமான வரான சூர்ய பிரகாஷை நியமித்தது மத்திய அரசு. வரலாற்றைக் காவிமயமாக்க, இந்திய வரலாற்று ஆய்வு மன்றத்தின் தலைவராக ஒய்.சுதர்ஷன் ராவ் அவர்களை நியமித்தது. ஒய்.எஸ்.ராவ் இந்திய ஜாதி அமைப்பைப் பெருமைப்படுத்தித் தன் வலைதளத்தில் எழுதியவர் ஆவார். “அரசாங்கத்தில் செய்யப்படும் நியமனங்கள் சங்கின் செல்வாக்கை அதிகரிப்பதற்கு மிக முக்கியம்”, என்று தில்லி பல்கலைக் கழகத்தின் அரசியல் அறிவியல்துறையின் தலைவர் பிரதீப்கே.தத்தாகூறினார்.

ஆர்எஸ்எஸ், பாதுகாப்பு மற்றும் கல்வித் துறைகளில் நாட்டின் கொள்கைகளில் மாற்றத்தை விரும்புவதாக அவர்கூறினார். புதியபாதுகாப்புஅமைச்சர், மனோகர்பரிக்கர், அவரதுஇளமைப் பருவத்தில் ஒரு சங்சாலாக் (sanghchalak.) மோடி அரசாங்கத்தின் அமைச்சர் களுடன் சங் தலைவர்கள் பல சுற்றுக்களாகக் கலந்துரையாடினர். முந்தைய தேசிய ஜனநாயககூட்டணி ஆட்சியின்போது, சங்கிற்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட முரண் பாடுகளைப் போல் தற்போதைய ஆட்சியில் நடக்காமல் தடுப்பதற்காக அக்கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் ஆக்ராவில் நவம்பர் மாதம் நடைபெற்ற ஓர் மூன்றுநாள் இளைஞர்கள் பயிற்சி முகாமில், ஒரு கோடி உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும் என்பதும் ஒரு லட்சம் ஷாகாக்கள் அமைக்க வேண்டும் என்பதும் தான் நம் இலக்கு என்று பேசியுள்ளார்.**

• மேற்கத்திய நாடுகள் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முறையைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரே இந்தியாவில் அம்முறை இருந்ததற்கு உதாரணம் விநாயகரே! என்று மோடி கூறியுள்ளார்.

• உத்தரகாண்டின் முந்தைய முதலமைச்சரும், தற்போது மத்திய அமைச்சருமான ரமேஷ் பொக்ரியால், "ஜோதிடம் ஓர் அறிவியல்; அது மற்ற அனைத்து அறிவியலையும் விட முதன்மையானதாக உலகிற்குக் கொண்டு செல்ல வேண்டும்" என்று கூறியதோடு மோடியின் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை கூற்றிற்கு ஆதரவாகவும் நின்றார்.

• "இஸ்லாமியர்களும், கிறித்துவர்களும் இராமரின் பிள்ளைகள்; அதனை நம்பாதவர்கள் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும்" என்று மத்திய அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோதி பேசினார். அதற்கு மன்னிப்பும் கேட்டார். ஆனால், சாத்வி ராஜ்ய சபாவில் பேசும் போது, "நான் மன்னிப்பு கேட்டது ஒரு போதும் அந்த எதிர்ப்பை அமைதிபடுத்தி விடாது" என்றுள்ளார். பா.ஜ.க. அமைச்சர்கள் மற்றும் சங் தலைவர்கள் பங்கேற்ற உலக இந்து மாநாடு டில்லியில் நடைபெற்றது. அதில், "பொதுவுடைமை, இஸ்லாம், கிறித்துவம் ஆகியவை இந்து ராஷ்ட்ரியத்தின் மரம விரோதிகள்" என்ற கோல்வால்கரின் கருத்து வலியுறுத்தப்பட்டது.

### கல்வியில் காவிமயம்

**தினாநாத் பத்ரா**. கல்வியைக் காவிமயமாக்க மிகவும் பொருத்தமானவர் என்று சங் பரிவாரால் தெரிவு செய்யப்பட்டவர். 2001 - இல் பா.ஜ.க. ஆட்சியில் இருந்த போது கல்வி அமைச்சராக இருந்த முரளி மனோகர் ஜோஷிக்குப் பக்கபலமாய் இருந்தவரும் இவரே. அமெரிக்க எழுத்தாளர்வெண்டி டானிகரின் இந்து மதம் பற்றிய புத்தகத்தை எதிர்த்தவரும் இவரே!

குஜராத் அரசு ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்குக் கட்டாய வாசிப்புப் பட்டியலைத் தயாரித்துள்ளது. இந்தியாவின் கலாச்சாரம், வரலாறு மற்றும் புவியியல் பற்றிய 'உண்மைகளை' மாணவர்களுக்குக் கற்பிப்பதற்காக இந்தப் பட்டியல் தயாராகவில்லை; மதவாத கருத்துகளை அறிவியலில், குறிப்பாகக் கண்டுபிடிப்புகளுக்குள் புகுத்தி 9 பாட நூல்களை (Text books) அறிமுகப்படுத்தியுள்ளது குஜராத் அரசு. ஒன்பதில் எட்டு புத்தகங்கள் சிக்ஷாபச்சாவ் அந்தோலன் சமிதி (கல்வியைப் பாதுகாக்கும் அமைப்பு) என்ற இந்துமத தேசியவாத அமைப்பின் நிறுவனர் தினா நாத் பத்ராவால் எழுதப்பட்டுள்ளன. பாரதிய ஷிக்ஷா நீதி ஆயோக் (Indian Education Policy Commission என்ற ஆலோசனைக் குழு ஆர்.எஸ்.எஸ்-இன் துணை அமைப்பான ஷிக்ஷா சன்ஸ்க்ருதி உத்தான் நியாஸால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தியக் கல்வி முறையை ஆய்வு செய்து அதை பாரதத்தை மையப்படுத்திய (Bharat-centric) கல்வி முறையாக மாற்றுவது தான் அந்த குழுவின் வேலையாகும். அக்குழுவின் தலைவரும் இதே தினா நாத் பத்ரா தான்.

> "இந்தியாவின் மிகப் பெரிய பொது ஒலிபரப்பான தூர்தர்ஷனையும் அகில இந்திய வானொலியையும் உள்ளடக்கிய ப்ரஸார் பாரதியின் (Prasar Bharathi) தலைவராக ஆர்.எஸ்.எஸ்.-க்கு மிகவும் நெருக்க மானவரான சூர்ய பிரகாஷை நியமித்தது மத்திய அரசு. வரலாற்றைக் காவிமயமாக்க, இந்திய வரலாற்று ஆய்வுமன்றத்தின் தலைவராக ஒய்.எஸ்.ராவ் அவர்களை நியமித்தது"

அவர் எழுதிய புத்தகங்கள் வருமாறு:-

- ஷிக்ஷன் நு பாரதியகரன் (கல்வியை இந்தியமயமாக்குதல்)
- தேஜோமய் பாரத் (ஒளிரும் இந்தியா)



**பாரதிய ஷிக்ஷா நீதி ஆயோக்**
(Indian Education Policy Commission)
**என்ற ஆலோசனைக்குழு ஆர்.எஸ்.எஸ்-ஆல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்தியக்கல்வி முறையை ஆய்வு செய்து அதை பாரதத்தை மையப்படுத்திய** (Bharat-centric) **கல்வி முறையாக மாற்றுவது தான் அந்த குழுவின் வேலையாகும்.**



- *ப்ரேர்னா தீப் 1,2,3,4 (முன்னுதாரனமான ஒளி)*
- *வித்யாலய் : ப்ரவ்ருத்தியோ நு கர் (பள்ளி : செயல்பாடுகளின் வீடு)*
- *ஷிக்ஷன் மா த்ரிவேனி (மும்முகக் கல்வி)*
- *வைதிக் கணித் (வேத கணிதம்)*

இப்புத்தகங்கள் அனைத்தும் கட்டுக் கதைகளாலும் மூடநம்பிக்கைகளாலும் நிறைந் துள்ளன. அது அவர்கள் கருத்தியலை மாணவர் களிடையே பரப்புவதற்கென்றே தெளிவாக வடிவமைக்கப் பட்டுள்ளன. அவை அய்க்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் உரிமைப் பிரிவுகளான 28, 29 -ஆம் பிரிவுகளை மீறுகின்றன. ஏனென்றால் வளர்ந்துவரும் குழந்தைகளுக்குத் தரமான, துல்லியமான தகவல்களைத் தருவதாகவோ புறநிலை அறிவு (Objective knowledge) வளர்வதற்கு ஒரு மூலமாகவோ அப்புத்தகங்கள் இல்லை. அரசுப் பள்ளி மாணவர்களைத் தற்போது குறி வைத்து செயல்படுகின்றனர்.

அப்புத்தகங்களின் உள்ளடக்கம் பகுத்தறிவோடு சிந்திக்கும் எவரையும் அதிர்ச்சியடையச் செய்யும்! அவை வருமாறு:-

*1) "அமெரிக்கா ஸ்டெம் செல் ஆராய்ச்சி யில் தனக்கே எப்போதும் பெருமை தேடிக் கொள்கிறது. ஆனால்உண்மை என்னவெனில், இந்தியாவின் டாக்டர் பாலகிருஷ்ணாகண்பத் மாதாபுர்கர் அவர்களுக்கு (Dr. Balkrishna Ganpat Matapurkar) உடல்பாகங்கள் மறுஉருவாக்கத் திற்காக அமெரிக்கக் காப்புரிமை கிடைத்தது. உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும் விஷயம் என்னவென்றால் இந்த ஆய்வு புதியது அல்ல; டாக்டர் மாதாபுர்கர் மகாபாரதத்தால் ஈர்க்கப் பட்டுள்ளார். குந்திக்கு சூரியனைப் போல பிரகாசமாக ஒருமகன்இருந்தான். இரண்டு வருடங்களாகக் கருவுறாமலிருந்த காந்தாரி இதைப் பற்றி அறிந்ததும் கருக்கலைப்பு செய்தாள்.*

*அவள் கருவறையிலிருந்து ஒரு சதைப் பிண்டம் வெளியேறியது. ரிஷி என்றழைக்கப் படும் வியாஸரை அழைத்தனர். அவர் அந்த சதைப் பிண்டத்தை ஒரு குளிர்ந்த தொட்டியில் சில மருந்துகளுடன் பதப்படுத்தி வைத்தார். பின், அதை 100 பகுதிகளாகப் பிரித்து, நெய் நிரம்பிய 100 தொட்டிகளில் தனித்தனியே பதப்படுத்தினார். இரண்டு வருடங்களுக்குப் பிறகு, 100 கவுரவர்கள் அதிலிருந்து பிறந்தனர். இதைப்படித்த பிறகு, மாதா புர்கர் ஸ்டெம் செல்கள் தன்னுடைய கண்டுபிடிப்பல்ல என்பதை உணர்ந்தார். இது, இந்தியாவில் 1000 வருடங்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப் பட்டு விட்டது" (பக்கம் 92, 93 தேஜோமய் பாரத்).*

*2) ஸ்காட்லாந்தைச் சேர்ந்த ஜான்லோகி பெய்ர்ட் 1926-ஆம் ஆண்டு தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார் என்பதை நாம் அறிவோம். ஆனால் நாம் உங்களை இன்னும் பழமையான தூர்தர்ஷனுக்கு அழைத்துச் செல்ல விரும்பு கிறோம். இந்திய ரிஷிகள் தங்கள் யோகாவைப் பயன்படுத்திதிவ்யாதிரிஷ்டி நிலையை அடைவர். மகாபாரதத்தில், சஞ்சய என்பவர் அஸ்தினா புரத்திலுள்ள அரண்மனையின் உள்ளே உட்கார்ந்து கொண்டு திவ்யாசக்தியைப் பயன் படுத்தி மகாபாரதப் போரை நேரடிஒளிபரப்பு செய்திருப்பார் (பக்கம் 64 தேஜோமய் பாரத்).*

*3) இன்று நாம் பயன்படுத்தும் மோட்டார் கார் வேத காலத்திலேயே இருந்தது. அது அனஷ்வ ரதம். ஒரு ரதம் என்பது குதிரைகளால் இழுக்கப்படும். ஆனால் குதிரைகளால் இழுக்கப்படாத ரதத்தைத் தான் அனஷ்வ ரதம் என்பர். அது தான் இன்றைய மோட்டார் கார். இது ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (பக்கம் 60 தேஜோமய் பாரத்).*

*4) மாணவர்களே! நீங்கள் எப்படி இந்தியாவின் வரைபடத்தை வரைவீர்கள்? பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபாள், பூட்டான், திபெத், வங்காளம், இலங்கை மற்றும் பர்மா போன்ற நாடுகள் பிரிக்கப்படாத இந்தியாவின் ஒருபகுதியாக இருந்தன என்று உங்களுக்குத் தெரியுமா? இந்த நாடுகள் அகண்ட பாரதத்தின் பகுதிகளாகும். - (பக்கம் 49 தேஜோமய்*




பாரத்). பத்ரா மாணவர்களுக்கு "அகண்ட பாரதத்தைப்" பற்றித் தெரிய வேண்டும் என்கிறார்.

5) இன்னொரு பாடத்தில், "பிரிக்கப்பட்ட இந்தியா என்பது பொய்யான ஒன்று; அகண்ட பாரதம் (பிரிக்கப்படாத இந்தியா) தான் உண்மை! பிரிக்கப்பட்ட இந்தியா செயற்கையான ஒன்று, நாம் எளிமையாக இந்தியாவை இணைத்து விடலாம்!" என்று உள்ளது.

6) நாம் அன்பிற்குரிய பாரத பூமியை "இந்தியா" என்ற சூத்திர (கீழ்த்தரமான) பெயரைக்கொண்டு அழைப்பது நம்மை நாமே கேவலப்படுத்திக் கொள்வதைப் போன்றதாகும். நம் நாட்டின் பெயரை மாற்ற ஆங்கிலேயருக்கு என்ன உரிமை இருக்கிறது? நாம் இந்த சதி வலையில் விழுந்து நம் நாட்டின் ஆன்மாவை மறக்கக் கூடாது (பக்கம் 53 தேஜோமய் பாரத்).

7) நம் மதத்திற்காக இறப்பது மேலானது; ஆனால் ஒரு வேற்று மதம் என்பது துன்பம் தருவதாகும் (பக்கம் 118 தேஜோமய் பாரத்).

தேஜோமய்பாரத் என்ற 125 பக்க புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட மேலே உள்ள இந்தப் பத்திகள் சமீப காலத்தில் குஜராத் அரசால் அரசு ஆரம்ப மற்றும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குக் கட்டாயத் துணை வாசிப்புப் பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. இப்புத்தகம் குஜராத் மாநிலப் பள்ளிப் பாடநூல் வாரியத்தால் (Gujarat State School Textbook Board :GSSTB) வெளியிடப்பட்டுள்ளது.

பத்ராவால் எழுதப்பட்ட 8 புத்தகங்களை குஜராத்தியில் மொழிபெயர்த்து தேஜோமய் பாரத்துடன் சேர்த்து GSSTB மாணவர்களுக்கு வழங்குகிறது.ஒவ்வொரு புத்தகமும் மோடியால் எழுதப்பட்ட செய்தியுடன் வருகிறது. "தேஜோமய் பாரத்" நூலில் மோடி அந்நூலை மறுபதிப்பு செய்ததற்காக GSSTB-அய் பாராட்டி எழுதிய செய்தி உள்ளது.

புத்தகத்தின் உள்ளடக்க ஆலோசகர் ஹர்ஷத்ஷா, 2006 வரை, வித்யாபாரதியில் குஜராத் தலைவராக இருந்தவர். தற்போது காந்திநகரிலுள்ள சில்ட்ரென்ஸ் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர். மறு ஆய்வுக் குழுவில் இருப்பவர்களும் வித்யா பாரதியுடன் சம்பந்தப் பட்டவர்களே! வித்யா பாரதி 18,000 பள்ளிகளை உள்ளடக்கியதாகும். அதில் 1.8 மில்லியன் குழந்தைகள் பயில்கின்றனர்; பாரதிய அத்யாபக் பரிஷத் என்ற ஆர்.எஸ்.எஸ்.துணை அமைப்பின் மூலம் இந்துத்துவா கருத்துகளை உள்வாங்கி பின்பற்றும் 80,000 ஆசிரியர்களையும் உள்ளடக்கியதாகும்.

ஹர்ஷத் ஷாதி சண்டே எக்ஸ்பிரஸ் நிருபர்களிடம் "தேஜோமய்பாரத் நாட்டின் வளமான பண்பாடு, பாரம்பரியம் பற்றியும் ஆன்மீகம் மற்றும் தேசப்பற்று குறித்தும் மாண வர்களுக்கு ஒரு பார்வையைக் கொடுக்கிறது. மொழியும் மாணவர்களுக்கு ஏற்றவாறு எளிமை யாக உள்ளது.அனைத்துப் பள்ளிகளுக்கும் இலவசமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தவிர மற்றவர்கள் படிப்பதற்காக ஒரு புத்தகத்தை ரூ.73-க்கு விநியோகிக்கலாம் என்று முடிவு செய்து 5000 பிரதிகளை அச்சிட்டுள்ளோம்" என்று கூறினார்.

கல்வி என்பது மாநில மற்றும் மத்திய அரசின் பொறுப்பாகும்.ஒரு மாநில பாடநூல் வாரியம் என்.சி.இ.ஆர்.டி (National Council of Education Research and TrainingNCERT) வகுத்துள்ள விதிமுறைகளின் அடிப்படையாகக் கொண்டு தான் பாடத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இந்த ஒன்பது புத்தகங்களும் மதம் மற்றும் புராணங்களைச் சார்ந்திருப்பதால் அவ்விதி முறைகளை மீறுகின்றன.

"பள்ளிகள் எப்படி தேஜோமய்பாரத் புத்தகத்தை என்.சி.இ.ஆர்.டி பாடத்திட்டத்தோடு சமரசப் படுத்துகின்றன?" என்று அகமதாபாத் பகுதியிலுள்ள கேந்திரிய வித்யாலயா இயக்கத்தின் துணை ஆணையர் பிதேவ்குமாரைக் கேட்ட போது, "ஒரு அரசுஊழியராக இருக்கும் நான் அரசாங்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றவும் செயல்படுத்தவும்தான் இங்கே இருக்கிறேன்" என்றார்.

"குஜராத்தை சோதனை பூமியாகப் பயன்படுத்துகிறார்கள். பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ்-இன் வழிமுறைகள் குஜராத்தில் வெற்றி பெற்றால் அதனை நாடு முழுவதும் பின்பற்றுவார்கள். இப்போது வரை, சிறப்புமிகு கல்வியாளர்கள் மூலம் கூட்டாக அமைக்கப்பட்ட என்சிஇஆர்டி பாடத்திட்டத்திற்கு இணையாக இந்துமதஅமைப்பின் கல்வியும் இந்தியா விலிருந்தது. ஆனால் இப்போது, ஆபத்து என்ன வெனில் அவர்கள்இரண்டையும் ஒன்றிணைக்க வேண்டும் என்று கருதுவது தான். 'சங்'-இன் சித்தாந்தம் மெதுவாக அரசின் கொள்கையாக மாறிவருகிறது", என்று குஜராத் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணி புரியும் கவுரங் ஜனி கூறினார்.

கடந்தஆண்டு "பாடநூல்கள் காவிமய மாவதைத் தடுக்கும் ஆணையம் (Committee for Resisting Saffronisation of Textbooks) கர்நாடகத்தில் ஓர் பாடநூலை எதிர்த்தது. ஏனெனில் அந்நூல் பெண்கள், தலித்துக்கள் மற்றும் வேத மறுப்புப் பாரம்பரியங்களின் குரல்கள்களை ஒடுக்குவதாக இருந்தது. ஆனால் அந்நூல் இன்று வரை மாற்றப்படவில்லை.

அரசியல் ஆய்வாளர் என்.பாஸ்கர ராவ், "பா.ஜ.க. உண்மையான வரலாற்றைத் திரிக்க முயல்கிறது. வரலாறு அழிக்கப்பட வேண்டியது அல்ல." என்றார்.

குஜராத் மட்டும் இவர்களின் இலக்கு அல்ல! அய்.சி.எஸ்.சி. என்றழைக்கப்படும் இந்திய இடைநிலைக்கல்வி ஆணையம் (Indian Council of Secondary Education) பத்தாம் வகுப்பு மாணவர் களுக்கு வழங்கியுள்ள வரலாறு பாடப் புத்தகத் தின் இரண்டாம் பகுதியில், "முஸ்லீம்லீக்கின் உருவாக்கம்" என்று ஒரு பாடம் உள்ளது. ஆனால் இந்து மத அமைப்புகளைப் பற்றிய ஒரு தகவலும் இல்லை. காந்தியின் படுகொலையைப் பற்றிப் பேசும் இடத்தில், அவரைப் படுகொலை செய்த கோட்சேவைப் பற்றியோ, அவருக்கு ஆர்.எஸ். எஸ்-உடன் இருந்த நெருக்கமான தொடர்பு பற்றியோ அவர்கள் எதையும் குறிப்பிடவில்லை. தமிழகம் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும் அய்.சி.எஸ்.சி. முறையைப் பின்பற்றும் பள்ளிகள் உள்ளன. அங்கே படிக்கும் மாணவர்களைக் காவி கும்பல் குறி வைக்கின்றன!

இவ்வாறு ஸ்டெம் செல்களுக்கும், தொலைக்காட்சிக்கும், மோட்டார் காருக்கும் பின் உள்ள அறிவியலைத் தெளிவாகக் கற்பிக் காமல் குழந்தைகளை மூட நம்பிக்கை யாளர்களாக, அறிவியல் அறிவற்றவர்களாக மாற்றுவதோடு நிற்காமல், வரலாற்றையும் தவறுதலாகக் கற்பித்து, மதவாதத்தைக் கற்பித்து அடுத்த தலைமுறையை மாணவ பருவத்தி லிருந்தே தங்களுக்கு ஆதரவாக மாற்ற இந்து மதவாத சக்திகளான சங் பரிவாரங்கள் முயற்சிக்கின்றன.

இந்துத்துவா சக்திகளின் கை ஓங்கி விட்டது. மறைமுகமாக செயல்பட்டு வந்த இவை வெளிப்படையாகவும், மிகத் தீவிரமாகவும், பாரதிய ஷிக்ஷா நீதி ஆயோக், அய்.டி.மிலன் போன்ற பல புதிய செயல்திட்டங்களோடும் செயல்படத் தொடங்கிவிட்டன. இந்தியா காவிமயமாகி வருகிறது.எச்சரிக்கை!!!!!

# தமிழ்நாட்டில் இந்துமத அரசியல் சக்திகள் காலூன்ற முடியவில்லை ஏன் ?

பேராசிரியர் எம்.எஸ்.எஸ்.பாண்டியன்



**த**மிழ்நாட்டில் இந்துத்துவ அரசியல்சக்திகள் வேகமாக வளர்ந்து வருவதாகவும், விரைவில் வலுவான இடத்தைப் பிடிப்பார்கள் என்று, 1990களின் தொடக்கத்தில் இருந்தே அரசியல் ஆய்வாளர்களிடையே ஒரு கருத்து நிலவி வருகிறது. அவ்வப்போது நடக்கின்ற மதக்கலவரங்கள், சென்னையிலும் பிறநகரங்களிலும் நடக்கும் மகாராஷ்டிரா பாணியிலான விநாயகர் சதுர்த்தி விழாக்கள் போன்றவை அவர்களிடம் இத்தகைய எண்ணத்தை ஏற்படுத்தியிருந்தது. திராவிடர் இயக்கங்களின் கொள்கைச்சரிவு, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் நாத்திகம், பகுத்தறிவு, பார்ப்பனஎதிர்ப்புக் கொள்கைகளில் செய்துகொண்ட சமரசங்கள், ஆகியவைதான் இந்துத்துவ அரசியல் வளர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தன என்று பல ஆய்வாளர்கள் (என்னையும்சேர்த்து) வாதிட்டு வந்தனர்.

ஆனால் இந்துத்துவ அரசியல்வளர்ச்சி குறித்த கணிப்புகளெல்லாம் இதுவரை "ஆய்வாளர்களின் அவநம்பிக்கையாகத்தான்" இருந்து வருகின்றன. குறிப்பிடத்தக்க எந்த இடத்தையும் இந்துமத அரசியல் சக்திகளால் தமிழகத்தில் பிடிக்கமுடியவில்லை என்பதுதான் எதார்த்தத்தில் உண்மையாக இருக்கிறது. தேர்தல் முடிவுகளில் இருந்து இதை நாம் தெரிந்து கொள்ளலாம் என்றபோதிலும், மேலும் உதாரணத்திற்கு 2000 களின் தொடக்கத்தில் நடந்த இரண்டு சம்பவங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய அளவில் இந்துத்துவ முகாமைச் சேர்ந்த இரண்டு பெரியதலைவர்கள் தமிழகத்தில் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் அவை. 2003 ஆம் ஆண்டு விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் தேசியத் தலைவர் பிரவீன் தொகாடியா, முத்துராமலிங்கத்தேவரின் நினைவுநாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள மதுரைக்கு வந்திருந்தார். முத்துராமலிங்கத்தேவர் என்பவர், பிற்படுத்தப்பட்ட தேவர்சமூகத்தினரால் கொண்டாடப்படுகிற மிகவும் பிரபலமான தலைவர். அப்படியிருக்க, 12 லட்சம் மக்கள் வாழ்கின்ற மதுரை மாநகரத்தில் தொகாடியாவின் உரையைக் கேட்பதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களால் வெறும் 50 பேரைக் கூடத்திரட்ட முடியவில்லை.

இன்னொரு சம்பவமும் 2001 ஆம் ஆண்டு மேமாதம் நடந்தது. பாரதிய ஜனதா கட்சியின்

> 1920களில் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த காலத்தில் இருந்தே, தமிழ் முஸ்லிம் மக்களைப் பார்ப்பனரல்லாதார் என்ற அடையாளத்துடனும் தமிழர் என்ற அடையாளத்துடனும் ஒருங்கிணைத்து வந்தார் பெரியார்

அனைத்திந்தியத் தலைவர் ஜனாகிருஷ்ணமூர்த்தி, மானாமதுரை என்கிற சிறிய நகரத்திற்குத் தன்கட்சி வேட்பாளருக்காகத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தார். ஜனாகிருஷ்ணமூர்த்தி, தமிழர் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். அந்த வேட்பாளர் அப்போதைய தமிழ்நாடு மாநில பா.ஜ.க தலைவராக இருந்த கிருபாநிதி என்பவர். அந்த நகரத்தின் பேருந்து நிலையத்திற்குப் பக்கத்தில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அங்கு மக்கள் யாரும் கூட்டத்திற்கு வரவில்லை. அதனால் பக்கத்தில் வாரச்சந்தை நடக்கின்ற இடத்திற்கு அருகில் அவர் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஒரு சிறிய மேடை அமைக்கப்பட்டு உள்ளூர் பா.ஜ.க ஆட்கள் சிலர் பேசிக்கொண்டிருந்தனர் ஆனால் அதைக் கேட்பதற்கு யாரும்இல்லை. ஜனாகிருஷ்ண மூர்த்தி காரில் இருந்து இறங்கக்கூட இல்லை. நிகழ்ச்சியை இரத்து செய்யச்சொல்லிக் கிளம்பிவிட்டார். இத்தனைக்கும் அந்தத் தேர்தலில் அவர்கள் திமுகவுடன் கூட்டணியில் இருந்தனர். முத்துராமலிங்கத்தேவரின் செல்வாக்கோ, திமுகவின் ஆதரவோ அன்று பாஜகவிற்கு ஒரு மதிக்கத்தக்க கூட்டத்தைக் கூட்டவில்லை. இந்தச்சம்பவங்கள் விதி விலக்கானவைகளாகக்கூட இருக்கலாம். ஆனால், இந்துத்துவ அரசியலுக்குத் தமிழகத்தில் வெகுமக்களிடையே எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள இவை ஓரளவு உதவக்கூடும்.

இந்தஆய்வில் நான் முன்வைக்கின்ற கருத்து என்னவென்றால்; தமிழகத்தில் இந்துத்துவ சக்திகள் காலூன்ற முடியாமல் இருப்பதற்கு, கலகக்காரரான (பெரியார்) ஈ.வெ.ராமசாமி தலைமையில் இயங்கிய திராவிடர்கழகமோ அல்லது திராவிட முன்னேற்ற கழகமோ செய்த நாத்திக பகுத்தறிவுப் பிரச்சாரங்கள் பெரிதும் காரணங்கள் அல்ல. மாறாக என்னுடைய வாதம் என்னவென்றால், இந்துமதத்திற்குள் நிலவுகின்ற ஜாதிய ஏற்றத் தாழ்வுகள், ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நீண்ட காலமாக அவர்கள் (திராவிட இயக்கங்கள்) செய்துவருகிற பிரச்சாரமும் (இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் மக்களிடம் நல்லெண்ணம் உண்டாகவும் இது துணைபுரிந்தது).

திமுக, தன்னுடைய நாத்திக / பகுத்தறிவுக் கொள்கைககளில் செய்துகொண்ட ஒருதனி பாணியிலான ( கடவுள் / மதநம்பிக்கை எப்படிப்பட்டதாய் இருக்கிறது என்பதைவிட, அவை எப்படி இருக்கவேண்டும் என்று புதிய விவாதங்களை மக்களிடம் ஏற்படுத்திய) சமரசங்களும், பார்ப்பனரல்லாத இந்துக் களிடையே, சுயவிமர்சனமும் சகிப்புத்தன்மையும் கொண்ட ஒரு புதுவிதமான இந்துமனநிலையை உருவாக்கி இருக்கிறது. இவைதான் தமிழக வெகுமக்களை இந்துத்துவ வலதுசாரி அரசியல் சக்திகளிடம் இருந்து விலகியிருக்கச் செய்கிறது என்பதுவே என்வாதம்.

### திராவிட இயக்கமும் இஸ்லாமும்

1947 இல் இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்குப்பிறகு, வடஇந்தியாவில் முஸ்லிம்லீக் கட்சி பல இடங்களில் பெரும்பாலும் கலைக்கப்பட்டாலும், இந்தியயூனியன் முஸ்லீம்லீக் என்ற புதியபெயரில் தென்இந்தியாவைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படத் தொடங்கியது. அதன் தலைவராக முகமது இஸ்மாயில் (காயிதேமில்லத்) என்ற தமிழர் இருந்தார். காயிதேமில்லத் 1948 ஆம் ஆண்டு மார்ச் 10ஆம் நாள் சென்னையில் கூட்டிய முஸ்லிம்லீக் முன்னணியினரின் கலந்துரையாடல் கூட்டத்திற்கு அழைத்த 147 பேர்களில், வந்தவர்கள் 30 பேர் மட்டுமே அதிலும் பெரும்பாலானோர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள். பிரிவினைக்கு முன்புவரை முஸ்லிம்லீக்கின் தலைமை இடமாகச் செயல்பட்ட உத்தரப்பிரதேசத்தில் இருந்து கிட்டத்தட்ட எவரும் வரவில்லை. வட இந்தியாவில் இருந்து தென்இந்தியாவிற்கு முஸ்லிம்லீக் தலைமை இடம் மாறுவதற்கு அப்போது தமிழ்நாட்டில் நிலவிய கருத்துச் சூழலும் துணைபுரிந்தது. எப்படியென்றால், பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய திராவிடர் இயக்கம், இந்துமதத்தில் நிலவும் ஜாதிய ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிரான தன்னுடைய போரில், முஸ்லிம்களையும் இஸ்லாம் மதத்தையும் தன்னுடைய தோழமைசக்தியாக நடத்தியது.

1920 களில் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த காலத்தில் இருந்தே, தமிழ்முஸ்லிம் மக்களைப் பார்ப்பனரல்லாதார் என்ற அடையாளத்துடனும் தமிழர் என்ற அடையா ளத்துடனும் ஒருங்கிணைத்துவந்தார் பெரியார். தமிழ்நாட்டு முஸ்லிம்கள் இந்துமதத்தில் நிலவிய தீண்டாமைக் கொடுமைகளில் இருந்து தப்பிக்க முஸ்லிமாக மாறியவர்கள் என்பார் பெரியார். தீண்டாமைக் கொடுமையில் இருந்து மீளவேண்டு மென்றால் முஸ்லிமாக மதம்மாறுங்கள் என்றும் அறிவித்தார். ஒரு பகுத்தறிவாளராக, இஸ்லாம் மதத்தில் நிலவும் மூடநம்பிக்கைகளைப் பிற்போக்குத்தனங்களை விமர்சிக்க அவர் தவறியதில்லை. ஆனால் ஜாதியக்கேடுகள் கொண்ட இந்துமதத்தைவிட இஸ்லாம்மதம் மேலானது என்பது அவரது கருத்தாகஇருந்தது. தீண்டாமை அற்ற, உருவவழிபாடு முறைஅற்ற, சமத்துவத்தை வலியுறுத்துகிற, விவாகரத்து மற்றும் விதவைமறுமணத்தை ஆதரிக்கிற, ஓர் இறைக்கோட்பாட்டைக் கொண்ட இஸ்லாம் மதம் இந்துமதத்தைவிட மேலானது என்று தன்கருத்தின் நியாயங்களை அவர் முன்வைத்தார்.

இஸ்லாம்மதத்தில், பார்ப்பான்இல்லை, சூத்திரன்இல்லை, பஞ்சமன்இல்லை. ஒருகடவுள், ஒருஜாதி அதாவது ஒருமார்க்கம், ஒருகுடும்பம் என்ற அடிப்படையில் அதன் கொள்கை அமைந்திருக்கிறது. இதுதான் திராவிட இனத்திற்குத் தேவையான கொள்கை, நாம் முன்புகொண்டிருந்த கொள்கை. ஆனால் ஆரிய இந்துமதமோ, பலஜாதிகளையும் பல கடவுள்களையும் கொண்டது. ஆரியர்கள் (பார்ப்பனர்கள்) பயனடைவதற்காகவே பல ஜாதிகள், பலகடவுள்களை உண்டாக்கி வைத்திருக்கிறார்கள். அதேசமயம் இது திராவிடர் களை இழிவுபடுத்துகிறது. உரிமைகளைப் பெறமுடியாமல் தடுக்கிறது. இந்தக் காரணங்களுக்காகவே பார்ப்பனர்கள் இஸ்லாம் மதத்தை வெறுக்கிறார்கள். கடுமையாக எதிர்க்கிறார்கள். ஆனால், திராவிடர்களுக்கு, தங்களின் இழிவை ஒழிப்பதற்கும் நல்வாழ்வு பெறுவதற்கும் இஸ்லாம் ஒருநல்லவாய்ப்பு." இப்படி ஓரிடத்தில் குறிப்பிடுகிறார் பெரியார்.

பார்ப்பன இந்துமதம் என்ற தீய கருநாகத்தை அழிப்பதற்கு அல்லது குறைந்தபட்சம் அதன் கொடும் விசத்தின் பாதிப்பில் இருந்து தப்புவதற்கு இஸ்லாம் பயன்படும் என்பதுதான் அவர் கருத்து. தீண்டாமைக்கொடுமையில் பாதிக்கப் பட்டிருப்பவர்களுக்கு அதில் இருந்து விடுபடு வதற்கு இஸ்லாம் ஒருமாமருந்து என்று பரிந்துரைத்தார். அவர் தன்னுடைய நாத்திகக் கொள்கையை எப்போதும் கைவிட்டவரில்லை. தன்னை இஸ்லாமிய மதஅழைப்பாளன் என்பதையோ, இஸ்லாமியத்தைப் பரப்புகிறவன் என்பதையோ கடுமையாக மறுத்தார்.

இப்படி இந்துமதத்தோடு செய்த ஒப்பீடுகளால், இயல்பாகவே தமிழர்களிடையே முஸ்லிம்மதம் பற்றிய நல்லெண்ணம் உண்டாயிற்று. வெகுமக்களிடையே இப்படி இஸ்லாம்பற்றிய நல்லெண்ணத்தை உருவாக்கியதால், சுயமரியாதை இயக்கத்தோடு முஸ்லிம்மக்கள் தங்களை நெருக்கமாக உணர்ந்தனர். இஸ்லாமிய மதஅறிஞர்களும் இத்தகைய திராவிட இயக்கப்பார்வையிலேயே, இஸ்லாம் மதத்தைப் பற்றி மக்களிடையே கருத்துகளை முன்வைக்க ஆரம்பித்தனர்.

உதாரணத்திற்கு, 1930 இல் வெளியான, ஏ.கே.அப்துல்ஹமீதுபாகவி எழுதிய "இயற்கைமதம்" என்ற நூலினைச் சொல்லலாம். தாருல்இஸ்லாம் என்ற இதழை நடத்திய இஸ்லாமிய மதஅறிஞரான பா.தாவுத்ஷாவிடம், திராவிட இயக்கக் கொள்கைகளின் பாதிப்பு இருந்தது. அவர் இஸ்லாம் மதத்தில் தேவையான சிலசீர்திருத்தங்களை வலியுறுத்தினார். முஸ்லிம் சமுதாயத்திலிருந்த மூடப்பழக்க வழக்கங்களை எதிர்ப்பது, மார்க்க பிரசங்க உரையைத் தமிழில் நிகழ்த்துவது, முஸ்லிம் பெண்களுக்கும் தமிழ்க்கல்வியையும், ஆங்கிலக்கல்வியையும் வழங்கல் போன்றவற்றைக் கோரினார்.

முகமதுநபியின் பிறந்தநாள் விழாக்களில் பெரியார் தொடர்ந்து பங்கேற்றார். பலநிகழ்வுகளில் சுயமரியாதை இயக்கத்தோடு முஸ்லிம்மக்கள் கைகோர்த்து நின்றனர். அதில் மிகமுக்கியமானது, 1930 களில் சுயமரியாதை இயக்கம் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் பரவலாகக் கலந்துகொண்டனர். சென்னையில் நடந்த போராட்டங்களில் கலிபுல்லா தலைமை தாங்கி வழிநடத்தினார். திண்டுக்கல்லில் ஜனாப்தங்கமீரான் தலைமையில் பெரியபடை திரண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். மதுரையில் முஸ்லிம்லீக் ஒரு பெரிய பேரணியை நடத்தியது. வேலூரிலும் மற்ற பலபகுதிகளிலும் முஸ்லிம்மக்கள் பல போராட்டங்களை, பேரணிகளையும், கூட்டங்களையும் சுயமரியாதை இயக்கத்

**இந்தஆய்வில்
நான் முன் வைக்கின்ற கருத்து என்னவென்றால்; தமிழகத்தில் இந்துத்துவ சக்திகள் காலூன்ற முடியாமல் இருப்பதற்கு, கலகக்காரரான (பெரியார்) ஈ.வெ. ராமசாமி தலைமையில் இயங்கிய திராவிடர்கழகமோ அல்லது திராவிட முன்னேற்றகழகமோ செய்த நாத்திக-பகுத்தறிவுப் பிரச்சாரங்கள் பெரிதும் காரணங்கள் அல்ல. மாறாக என்னுடைய வாதம் என்னவென்றால், இந்துமதத்திற்குள் நிலவுகின்ற ஜாதிய ஏற்றத்தாழ்வுகள், ஒடுக்குமுறை களுக்கு எதிராக நீண்டகாலமாக அவர்கள் (திராவிட இயக்கங்கள்) செய்துவருகிற பிரச்சாரமும் (இஸ்லாம் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் மக்களிடம் நல்லெண்ணம் உண்டாகவும் இது துணைபுரிந்தது).**

தவர்களோடு சேர்ந்து நடத்தினர். தமிழ்நாட்டில் இருந்து வெளிவந்த உருது பத்திரிக்கைகூட இந்தித்திணிப்பைக் கண்டித்து எழுதியது.

ஆங்கிலேய ஆட்சியாளர்களிடம் இருந்து இந்தியா சுதந்திரம் அடைந்தபிறகு, திகவும் திமுகவும் பிரிவினைக்கோரிக்கையைக் கொண்டிருந்ததால், இந்திய யூனியன் முஸ்லிம்லீக் அமைப்பால் அவர்களுடன் தோழமையுடன் இணைந்து செயல்பட முடியாமல் போனது. 1950 களில் வேறு வழியில்லாமல் முஸ்லிம்லீக் காங்கிரஸ் கட்சியோடு கூட்டணி அமைத்து செயல்பட வேண்டியிருந்தது. பலசமயங்களில் காங்கிரஸ், முஸ்லிம்லீக்கை நிராகரித்தும், வாய்ப்பிருந்தால் முஸ்லிம்லீக்கை கலைத்து காங்கிரசுடன் இணைத்துக்கொள்ளவும் முயன்றது.

1960 களில் நிலைமை கொஞ்சம்மாறியது. திமுக தன்னுடைய பிரிவினைக்கோரிக்கையைக் கைவிட்டதனால், திமுகவுடன் கூட்டணி அமைப்பதில் முஸ்லிம்லீக்கிற்குத் தயக்கம் எதுவும் இருக்கவில்லை. அது இரண்டு கட்சிகளுக்குமே பயனுள்ளதாய் அமைந்தது. அதேசமயம், 1950 களிலேயே முஸ்லிம்லீக் திமுகவிடம் இருந்து விலகிஇருந்த காலத்திலேயே ,திமுகவில் பலமுஸ்லிம்கள் சேர்ந்து கட்சியின் பலபொறுப்புகளிலும் இருந்தனர்.

பார்ப்பனரல்லாதார் இயக்கமாகிய திராவிடர் இயக்கத்திற்கும் முஸ்லிம்மக்களுக்கும் இடையே உருவான இந்த நெருங்கிய தோழமை உணர்வின் விளைவாக உருவான முழக்கம் இன்றுவரை தொடர்கிறது, அது “இஸ்லாம் எங்கள்வழி, இன்பத்தமிழ் எங்கள்மொழி” என்பதாகும். “தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தங்களை எப்போதும் திராவிடர்களாகவும் தமிழர் களாகவும்தான் உணர்ந்திருந்தார்கள் அடையாளப் படுத்தியிருக்கிறார்கள். மிக அரிதாகவே அவர்கள் தங்களைச் ‘சிறுபான் மையினர்’ என்று அழைத்திருக்கிறார்கள்” என்கிறார் அப்துல் ஃபகரி எனும் அறிஞர்.

### திமுகவும் மதமும்

பார்ப்பனரல்லாத தமிழர் (திராவிடர்) என்கிற பரந்த அடையாளத்தின்கீழ் முஸ்லிம்களை ஒருங்கிணைத்ததன் மூலமும், இந்து மதத்தில் நிலவும் பார்ப்பன மேலாதிக்கத்திற்கு எதிராக நீண்டகாலமாக நடத்தப்படும் பிரச்சாரத்தினாலும், பார்ப்ப னரல்லாத மக்களிடம் ஒரு புதுவிதமான பார்ப்பனரல்லாத இந்துமதஉணர்வு உருவானது. அது ஓரளவிற்குச் சுயவிமர்சனமும் சகிப்புத்தன்மையும் கொண்டதாக இருந்தது. 1950 களில் திமுக, தன்னுடைய நாத்திக-பகுத்தறிவுக் கொள்கைகளைத் தளர்த்திக் கொண்டபோது, அது மேற்சொன்ன காரணங்களுடன் சேர்ந்து கொண்டதுடன், அந்தப் பார்ப்பனரல்லாத இந்துமத மனநிலையை வளர்ப்பதிலும் துணைபுரிந்தது.

1967 இல் அண்ணா தமிழகத்தின் முதலமைச்சர் ஆனபின், ஒரு பத்திரிக்கை நேர்காணலில், “நான் உண்மையான கடவுள்நம்பிக்கை என்ற ஒன்று இருக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறேன்” என்று சொன்னார். மேலும்அதில், “சொர்க்கவாசல் என்கிற திரைப்படத்தின் கதை, வசனத்தை எழுதினேன். அந்தப்படம் மக்களிடையே பரவலான வரவேற்பை பெற்றது. நாத்திகம் ஆத்திகம் குறித்துதான் அந்தப்படம் பேசுகிறது. பலகடவுள்களை நம்புவதும் பலவிதமான சடங்குகளைப் பின்பற்றுவதும் உண்மையான ஆத்திகத்திற்கு அவசியமில்லை. உண்மையான கடவுள்நம்பிக்கை என்பது சகமனிதனிடம் அன்புகாட்டுவதுதான். மக்களிடம் நிலவும்

மூடநம்பிக்கை குருட்டுப் பழக்கவழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்று விரும்புகிற ஒரு நாத்திகன் நான் என்பதில் மறுப்பு ஏதும்இல்லை. ஆனால், மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் உணர்த்தக்கூடிய ஆன்மிக உணர்வு மக்களிடையே இருக்கவேண்டியது அவசியம்."

மதம் குறித்த தன்னுடைய இந்த நிலைப்பாட்டை, மதநம்பிக்கை என்பது எப்படி இருக்கவேண்டும் என்கிற தன்னுடையகருத்தை, திமுக தலைமை 1950 களில் இருந்து முன்னெடுத்தது. உதாரணத்திற்கு 1950களின் தொடக்கத்தில் அண்ணா பேசிய ஒருஉரையில், "நம்மிடம் அன்பைக் கேட்கின்ற கடவுள்தான் நமக்கு வேண்டும். பெரிய கோபுரங்களையும், புரோகிதர் என்னும் இடைத்தரகர்களையும், மனைவிமார்களையும், விலையுயர்ந்த நகைகளையும், திருவிழாக்களையும் கேட்கின்ற கடவுள்களோடு நமக்கு எந்தப்பந்தமும் இல்லை அவர்கள் நமக்குத் தேவையுமில்லை.

ஒருவேளை கடவுள் நம்மக்கள் முன்னால் தோன்றினால், "அடமுட்டாள்களே, நான் இந்த உலகத்தைப் படைத்தேன். அதைவிட, எதுசரி, எதுதவறு என்று பகுத்தறிந்து புரிந்து கொள்ளக்கூடிய அறிவை உங்களுக்குக் கொடுத்தேன். உங்களிடம் நான் எதிர்பார்த்தது சகமனிதர்களிடம் அன்பு காட்டவேண்டும் என்பதையும், ஏழ்மையிலும் கஷ்டத்திலும் இருப்பவர்களை முன்னேற்றப் பாடுபடவேண்டும் என்பதைத்தான்"

நாத்திகமும் பகுத்தறிவும் பேசிக் கொண்டிருந்த திமுக, எது உண்மையான கடவுள்நம்பிக்கை என்று பேசவேண்டிய கொள்கைமாற்றத்திற்கு ஆளானதற்குக் காரணம், அவர்கள் தேர்தல்அரசியலில் ஈடுபடமுடிவெடுத்ததுதான். கடவுள்நம்பிக்கை கொண்டவர்களை அதிகம் கொண்ட ஒரு தொகுதியில், நாத்திகக்கொள்கையைக் கொண்டு அரசியலில் ஈடுபடமுடியாது என்ற எதார்த்தத்தை அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

1971 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் திராவிடர்கழகம்சேலத்தில் 'மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு' என்ற ஒன்றை நடத்தியது. அந்த மாநாட்டின் ஊர்வலத்தில் இந்துவைஷ்ணவ கடவுளான இராமனுடைய படம் பொதுமக்கள் முன்னிலையில் செருப்பால் அடிக்கப்பட்டது. அப்போது திமுக ஆட்சியில் இருந்தது. எதிர்கட்சிகள் இதை மிகப்பெரிய பிரச்சனையாகக் கிளப்பினார்கள். அதேஆண்டு தமிழக சட்டசபைக்குத் தேர்தல் நடந்தது. திமுக இந்துக்களுக்கு எதிரான கட்சி என்பதுதான் காங்கிரஸ் கட்சியினரின் மிகப்பெரிய பிரச்சாரமாக இருந்தது. தி.க மாநாட்டின் படங்களைத் துண்டறிக்கைகளாக அச்சடித்து (காங்கிரசு) மக்களிடம் விநியோகித்தது. திமுகவை நாத்திகக்கட்சி என்றும், உங்களுடைய புனிதமான வாக்குகள் திமுகவிற்கா? என்றும் மக்களிடம் பிரச்சாரம் செய்தது. திமுக தங்களை நாத்திகக்கட்சி என்பதை மறுத்து, மதம் / கடவுள்நம்பிக்கை குறித்த தங்களுடைய நிலைப்பாட்டை விளக்கி பிரச்சாரம் செய்தது. முடிவில் திமுக மிகப்பெரிய வெற்றியைப் பெற்று மீண்டும் ஆட்சியைப்பிடித்தது.

தேர்தல்அரசியல் கொடுத்த நிர்ப்பந்தத்தினால்தான் திமுக ஒருவகையான சமரசப்போக்கினை முன்னெடுத்திருந்தாலும், அதனால் ஏற்பட்ட பின்விளைவுகள் முக்கியமானவை. மதநம்பிக்கைக்கும் பகுத்தறிவிற்கும் இடையில் இருந்த பகைமுரண்பாட்டை அது ஒருவகையில் குறைத்தது. மனிதர்களுக்கு இடையே சமத்துவம் வளரவேண்டும் என்ற பொதுஇலக்கைநோக்கிச் செல்லும்பயணத்தில் பகுத்தறிவாளரும் ஒருவகையான மதநம்பிக்கையாளரும் சேர்ந்து இயங்கமுடியும் என்பதை அதுஉணர்த்தியது.

உதாரணத்திற்கு இன்னொரு சம்பவத்தைச் சொல்லலாம். 1970 ஆம் ஆண்டு, சென்னையில் ஒருஇடத்தில் திடீரென ஒருபிள்ளையார்சிலை தோன்றி அதுசர்ச்சையானது. பள்ளிவாசல் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில், இந்துமதத்தைச் சேர்ந்த போலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இரகசியமாக ஒரு பிள்ளையார்சிலையை வைத்து அது சுயம்புவாகப் பூமியில் இருந்து தோன்றியது என்ற புரளியைக் கிளப்பிவிட்டார். மக்களிலும்சிலர் அதைநம்பினர். தமிழகஅரசு திடீர் நடவடிக்கையாக ஓர்இரவில் அந்தச் சிலையை அங்கிருந்து அகற்றியது. அப்போது முதலமைச்சராக இருந்த கருணாநிதி, அறிவியல் ஆய்வின்படி அங்குபூமியில் எந்தப்பிளவும் ஏற்படவில்லை என்றும், ஆதிசங்கரரும் விவேகானந்தரும் இத்தகைய புரளிகளுக்கு எதிராகச் சொன்ன கருத்துகளை மேற்கோள்காட்டி தன்செயலை நியாயப் படுத்தினார். மக்களும் ஏற்றுக்கொண்டார்கள்.

பார்ப்பனரல்லாத இந்துக்களிடையே ஒருவிதமான சுயவிமர்சனமும் சகிப்புத்

தன்மையும் கொண்ட இந்துமத உணர்வை, திராவிடஇயக்கம் முன்னெடுத்த அரசியல் ஏற்படுத்தியது. அதுமட்டுமல்லாமல், அந்த மத உணர்விற்குப் பார்ப்பனரல்லாத இந்துமதத்தலைவர்களின் அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற்றிருந்தது. அதுஎப்படி என்று குன்றக்குடி அடிகளாரின் வாழ்க்கைச் சம்பவங்களில் இருந்துபார்ப்போம்.

**ஒரு இந்துமதத் தலைவரின் வாழ்க்கை :**

காவிஉடையும் நீண்டதாடியும் தன்னுடைய அடையாளமாகக் கொண்ட, குன்றக்குடி அடிகளார் என்று பரவலாக அறியப்படுகிற, ஸ்ரீதெய்வசிகாமணி அருணாச்சலதேசிகர் (1925 - 95), குன்றக்குடி-திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைமைப்பொறுப்பில் சுமார் 40 ஆண்டுகள் இருந்தார். 1995 இல் அவர் மறைந்தபோது, தமிழகம் முழுவதும் பெரியஅளவில் நாத்திகர்களாலும் மதச்சிறுபான்மையினராலும் இரங்கல்தெரிவிக்கப்பட்டது.

1952 ஆம் ஆண்டு குன்றக்குடி-திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைமைப் பொறுப்பை அவர் ஏற்ற அந்தக்காலக்கட்டத்தில், தமிழகம் முழுவதும் பெரியாரின் நாத்திகப் பிரச்சாரம் வலுவாக நடந்து கொண்டிருந்தது. தீவிர சைவசமயப் பற்றாளர்கள், பெரியாரின் பிரச்சாரத்திற்குச் சரியான பதிலடியை அடிகளார் கொடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தனர். அருள்நெறித்திருக்கூட்டம் என்றபெயரில், சைவசமயப் பற்றாளர்கள், சிறந்த சொற்பொழி வாளரான அடிகளாரை வைத்து, பெரியாரின் நாத்திகப்பிரச்சாரத்தால் இழந்த செல்வாக்கை மீட்க முயன்றனர். பெரியாருக்கும் அடிகளா ருக்கும் இடையே நடந்துவந்த இந்தமோதல் போக்கு அதிகக்காலம் நீடிக்கவில்லை.

1955 ஆம் ஆண்டு, அவர்கள் இருவரும் சந்தித்தபின், அவர்களுக்கு இடையில் இருந்த முரண்பாடுகள் முடிவுக்கு வந்தது மட்டுமல்லாமல், அதன்பிறகு பலஆண்டுகள் தொடர்ந்த அவர்களுடைய கூட்டணி அன்றுமுதல் தொடங்கியது. அடிகளார் தன்னுடைய காவியையும் விடவில்லை சைவத்தையும் விடவில்லை, ஆனால் "ஜாதியையும், ஜாதிஅமைப்பையும் தகர்த்து, சமூகத்தைச் சீர்திருத்தும் பணியை நான் செய்கிறேன். எனக்கு எந்த எதிர்ப்பையும் கண்டு பயமும் இல்லை கவலையும் இல்லை. பெரியாருடைய ஜாதிஒழிப்புக் கிளர்ச்சியில் என்னை முழுமையாக இணைத்துக்கொள்ளக் காத்திருக்கிறேன்" என்றார். ஜாதியும் தீண்டாமையும் அவருடைய பட்டிமன்றத்தில் விவாதப் பொருளாக மாறின.

1970 ஆம்ஆண்டு, திமுகஅரசு அனைத்து ஜாதிகளும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தபோது, தமிழ்ப்பார்ப்பனர்களிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியது. அடிகளார் அந்தச்சட்டத்திற்கு எதிரான போராட்டங்களில் இருந்து விலகியே இருந்தார். அதுமட்டுமல்லாமல், அடிகளார் முக்கியப்பங்கு வகித்த, சைவமடங்களின் கூட்டமைப்பான தெய்வீகப்பேரவை, புதுச்சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது. வாழ்நாள் முழுவதும் ஜாதிஅமைப்பிற்கு எதிராகப் போராடிய அடிகளார்மீது கடுமையான விமர்சனங்களை இந்துஅடிப்படைவாதிகள் செய்துவந்தனர்.

1983 ஆம்ஆண்டு நடந்த, இந்துமத மடங்களின் தலைவர்கள் கூட்டத்தில், "இந்துக்களின் ஒற்றுமை பற்றிப் பேசுகிற யாராவது, ஒரு ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்தஒருவரைத் தங்கள் மடத்தின் தலைவராக நியமிக்க முயற்சி செய்ததுண்டா? ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரை வேதங்களைப் படிக்கவாவது அனுமதித்திருக்கிறீர்களா?" என்று கேள்விகளை எழுப்பினார்.

குறுகிய மதநம்பிக்கையைவிட அடிகளாருக்கு சமூகஅக்கறையே மேலோங்கி இருந்தது என்பதற்குச் சிறந்தசாட்சியாக அமைந்தது 1971 ஆம்ஆண்டு நடந்த சம்பவம். தி.க நடத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாட்டில் நடந்த நிகழ்ச்சி பெரிய சர்ச்சையாக மாறியிருந்ததைப்பற்றி ஏற்கனவே குறிப்பிட்டி ருந்தேன். அடிகளார் அந்தச்சர்ச்சையில் தலையிட்டார். ஆனால் அதில் அவர் நாத்திகர்களுக்கு ஆதரவாக நின்றார். அவர் ஒருபொதுஅறிக்கையை வெளியிட்டார். அதில் தன்ஆதரவாளர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதுபற்றி எந்தக்கவலையும் இல்லாமல், "இன்றைக்கு, ஆத்திகம் என்பது உயர் ஜாதியினரின் நலனுக்காக இருக்கிறது; பெரும்பான்மையான தமிழர்களின் நலனுக்காக நாத்திகம் உழைக்கிறது" என்று அறிவித்தார்.

அடிகளார் ஆழமான தமிழ்ப்பற்று கொண்டவர். 1965 ஆம்ஆண்டு நடந்த இந்திஎதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்தபோது, அதில் ஈடுபட்டு கைது

செய்யப்பட்டார். 1983 ஆம்ஆண்டு, அதே உணர்வோடு சிதம்பரம் நடராஜர் கோவில்கருவறையில் நுழைய அவருக்குத் தீட்சிதர்கள் கொடுத்த அழைப்பை நிராகரித்தார். அங்கு, சமஸ்கிருதத்தில் மட்டுமே மந்திரம் ஓதப்படுவதைக் கண்டித்தார்.

1977 இல் குன்றக்குடி மற்றும் அதன் அருகில் இருக்கும் கிராமங்களில், நவீன அறிவியல் முறைகளின் அடிப்படையில் கிராம மறு கட்டமைப்புப் பணிகளை முன்னெடுத்தார். பொதுமக்களிடம் அறிவியல் மனப்பானமையை வளர்த்த அந்தப்பணிகளைப் பாராட்டி, மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சகம் தேசியவிருது ஒன்றைக் கொடுத்து கவுரவித்தது. "ஒருமதத்தலைவருக்கு, அறிவியல் மனப்பான்மையை மக்களிடம் வளர்த்ததற்கான தேசிய விருது கொடுக்கப்பட்டது, அடிகளாருக்கு மட்டும்தான்" என்று முன்னாள் துணைவேந்தர் வா.செ.குழந்தைசாமி குறிப்பிடுகிறார்.

அடிகளார் தன்னுடைய இறுதிக்காலத்தில், தன்னுடைய மோசமான உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் பெரும்பாலான உழைப்பையும் நேரத்தையும், மதக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மதநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் செலவிட்டார். 1982 இல் மதக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளுக்கு நேரடியாகச்சென்று பார்வையிட்டு பாதிக்கப்பட்டோர் பக்கம் நின்றார். பாபர்மசூதி இடிக்கப்பட்ட போது தன்னுடைய கடுமையான கண்டனங்களைப் பதிவுசெய்தார். சமூக அமைதிக்காகச் சிறு அமைப்புகள் முன்னெடுக்கிற முயற்சிகளில்கூடப் பங்கெடுத்தார். அவருடைய இறுதிஊர்வலத்தில் பெரிய எண்ணிக்கையில் முஸ்லிம்கள் பங்கேற்றத்தில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

1982 ஆம் ஆண்டு திருச்சியில் அடிகளார் தலைமையில் கூடிய அருள்நெறிதிருக்கூட்டத்தின் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம், அடிகளாருடைய சமூகப்பற்றிற்கு மிகப்பெரும் சான்றாகவிளங்குகிறது. "தீண்டாமையையும், ஜாதியையும் ஒழிக்கப் பாடுபடுகிற திராவிடர்கழகமும், வறுமையையும் ஏழ்மையையும் ஒழிக்கப்பாடுபடுகிற கம்யூனிஸ்ட் இயக்கங்களும் நம்முடைய தோழமைச்சக்திகள்; ஜாதிப்பிரிவினையும், வறுமையும் அதனால் ஏற்படும் தீமைகளும் கர்மவினையின் பயன்என்று சொல்கிற பார்ப்பனீயமும் அந்தத்துணை அமைப்புகளும் நமது எதிரிகள்." அடிகளார் மறைந்தபோது, இந்துத்துவ வலதுசாரி முகாமைச்சேர்ந்த அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவும், காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயேந்திரசரஸ்வதியும் இரங்கல் தெரிவிக்கவில்லை என்பது கவனிக் கத்தக்கது.

**இந்துத்துவ சக்திகள் எதிர்கொள்ளும் சங்கடங்கள் :**

முஸ்லிம்களையும் தன்னகத்தே ஒருங்கிணைக்கும் தமிழர் என்ற அடையாளமும், ஒருவிதமான சுயவிமர்சனமும் சகிப்புத் தன்மையுடன் கூடிய பார்ப்பனரல்லாத தமிழர் என்கிற அடையாளமும் இருக்கும்போது, தமிழகத்தில் ‘இந்துக்கள்’ என்ற அரசியல் அடையாளத்தை வளர்த்தெடுப்பதில் எந்த வெற்றியையும் இந்துத்துவ வலதுசாரி அரசியல் சக்திகளால் பெறமுடியவில்லை. அந்தவிரக்தியில், அவ்வப்போது அவர்கள், தமிழ்/ தமிழர் என்ற அடையாளத்தை முன்னிறுத்தி காலூன்ற முடியுமா என்று முயற்சி செய்கிறார்கள் அதிலும் குறிப்பிடத்தகுந்த எந்த வெற்றியையும் அவர்கள் பெறவில்லை.

2000 ஆம் ஆண்டு, தமிழ்நாடு பா.ஜ.கவின் பொதுச்செயலாளராக இருந்த இல.கணேசன், அப்போதைய மத்தியஅரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சராக இருந்த முரளிமனோகர் ஜோசியிடம், தமிழுக்குச் செம்மொழி அங்கீகாரம் வழங்கவேண்டும் என்றும், தமிழை இந்தியாவின் ஆட்சிமொழியாக அறிவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தார். 2000ஆம் ஆண்டை தமிழ்மொழி ஆண்டாக அறிவிக்கக் கோரினார். 1990 களின் இறுதியில் இருந்தே, பா.ஜ.க தன்னுடைய தமிழ்மீதான காதலை வெளிப்படுத்த, கிடைக்கின்ற அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்திவந்தனர். 1999 இல் பா.ஜ.கவின் தேசியச்செயற்குழு சென்னையில் கூடியது. நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு திருவள்ளுவர் பெயரையும், உள்ளரங்கத்திற்கு பாரதியார் பெயரையும் சூட்டினர். 100 திருக்குறள்களை ஆங்கிலத்திலும் இந்தியிலும் எழுதி அரங்கத்திற்கு உள்ளே காட்சிப்படுத்தியிருந்தனர்.

தேசங்களும் தேசியங்களும் தோன்றுவதற்குப் பலநூறுஆண்டுகளுக்கு முன்னாள் எழுதப்பட்ட திருக்குறள், ஒரு உலகப் பொதுமறையாகும். 20 ஆம் நூற்றாண்டில், திராவிடர்இயக்கச் சிந்தனையாளர்கள், திருக்குறளை அதன் மதச்சார்பற்றதன்மைக்காக

முன்னெடுத்தனர். 1967 இல் திமுக ஆட்சிக்கு வந்தபின்னால், திருவள்ளுவரும் திருக்குறளும் தமிழர்களின் மதச்சார்பின்மையின் அதிகாரப் பூர்வமான அடையாளமாக மாறின. இந்த வரலாற்றுப் பின்னணியில், திருவள்ளுவரைத் தனதாக்கிக் கொள்ள பா.ஜ.க இன்னும் பலமாக உழைக்கவேண்டி இருக்கிறது.

2000 ஆம்ஆண்டு ஜனவரிமாதம், கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி சிலையைக் கருணாநிதி திறந்தபோது, அந்தநிகழ்ச்சியில் இல.கணேசன் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். இனி எல்லோரும் தமிழில் மட்டுமே பேசவேண்டும், தமிழிலேயே பெயர்வைக்கவேண்டும், மத்திய அரசிடம்பேசி பெங்களூரில் திறக்கப்படாமல் இருக்கும் திருவள்ளுவர் சிலையைத் திறக்க ஏற்பாடு செய்வேன், என்றெல்லாம்பேசினார்.

தமிழ்,தமிழர்அடையாளத்தைப்பயன்படுத்திக் கொள்ள பா.ஜ.க முயற்சி செய்த இன்னொரு சம்பவத்தைப் பார்ப்போம். 2000-01 கல்வி ஆண்டில் இருந்து தமிழகத்தில் அனைத்து ஆரம்பப் பள்ளிகளிலும், தமிழ்மட்டுமே பயிற்று மொழியாக இருக்கும் என்ற அரசாணையைத் தமிழக அரசு வெளியிட்டது. சென்னை உயர் நீதிமன்றம் அந்த அரசாணைக்குத் தடைவிதித்த போதும், பலர் அந்த அரசாணையை ஆதரித்தனர். மாநில பா.ஜ.க உட்பட. “பழம்பெருமைவாய்ந்த தமிழ்மொழியைக் காப்பதற்காகத் தமிழகஅரசு எடுத்த துணிச்சலான முடிவு. இதுவெறும் மொழிப்பிரச்சனை அல்ல, சுயமரியாதைப் பிரச்சனை. எத்தனை எதிர்ப்பு வந்தாலும் தமிழகஅரசின் பக்கம் நிற்போம்” என்று அறிவித்தார் இல.கணேசன். தமிழை, கல்லூரிகளில் பயிற்றுமொழியாகக் கட்டாய மாக்கப்பட்டாலும், பா.ஜ.க ஆதரிக்கும் என்றார்.

தமிழகத்தில் எப்படியாவது காலூன்றிவிட வேண்டும் என்று இந்துத்துவ சக்திகள் முயல்வதை இதில் நாம் பார்த்தாலும், அவர்களால் எதிர்பார்த்த அரசியல் வளர்ச்சியை அடையமுடியவில்லை. எப்போதெல்லாம் இந்துத்துவ அரசியல் தலைதூக்குவதாக நினைக்கிறோமோ, அப்போதெல்லாம் தமிழகம் தன்னுடைய உறுதியான நிலையை நிரூபித்துக் கொண்டே இருக்கிறது. உதாரணத்திற்கு,1998 இல் தமிழில் அர்ச்சனை செய்யப்படுவதற்கு எதிராக, சமஸ்கிருதத்தில்தான் அர்ச்சனை செய்யப்பட வேண்டும் என்று, இந்துமக்கள்படை என்ற அமைப்பு வழக்கு ஒன்றை நீதிமன்றத்தில் தொடுத்தது. தமிழகத்தில் பரவலாக இந்து பாதுகாப்புப்படையின் செயலுக்கு எதிரான கருத்துத் தோன்றியது. எந்த மொழியில் அர்ச்சனை செய்யவேண்டும் என்பதை இந்துபக்தர்கள்தான் முடிவு செய்ய வேண்டும் என்று இந்துமுன்னணி, இந்துப் பாதுகாப்புப் படைக்கு ஆதரவாகக் களம்இறங்கியது. இந்துமுன்னணிக்குப் பதில்அளிக்கும் விதமாக, அப்போது தமிழ்த்தேசியஇயக்கம், கோவில்களில் இதுதொடர்பாக பக்தர்களிடம் ஒருவாக்கெடுப்பு நடத்தியது. 90 சதவிகிதத்திற்கும் மோலானோர் தமிழில் அர்ச்சனை செய்வதற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

கடந்த பலஆண்டுகாலத் தமிழக அரசியல் வரலாற்றின் பயனாய் ஒரு பொதுப்புத்தி உருவாகியிருக்கிறது. அதன்படி முஸ்லிம்களைப் பார்ப்பனரல்லாத மக்களுக்கு எதிராகச் சித்தரிப்பது இப்போதைக்கு அவ்வளவு எளிதான காரியம்அல்ல. அதேசமயம், பார்ப்பனரல்லாத இந்துக்களின் மதஉணர்வு என்ற ஒன்று தோன்றியிருக்கிறது, அது பகுத்தறிவுக்கும் மதநம்பிக்கைக்கும் இடையிலான முரண்பாடுகளைக் கடந்து, மனிதசுதந்திரத்தையும் சமத்துவத்தையும் வளர்ப்பதற்குப் பகுத்தறிவு - மதநம்பிக்கை இரண்டுமே பங்களிக்கவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கிறது. இந்த வரலாற்றுப் பின்புலமும் அதன் விளைவுகளும் தான் தமிழகத்தில் இந்துத்துவ சக்திகள் காலூன்ற விடாமல் தடுக்கிறது.


தமிழில் : பிரபாகரன் அழகர்சாமி

மொழிபெயர்ப்பாளர்குறிப்பு: புதுதில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தின், வரலாற்று ஆய்வுமையத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய தோழர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் எழுதிய ஆய்வுக்கட்டுரை, 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட்4 தேதியிட்ட எக்கனாமிக் அன்ட் பொலிடிக்கல் வீக்லி ஆங்கில இதழில் வெளியிடப்பட்டது. அதன் சுருக்கமான எளிமைப்படுத்தப்பட்ட தமிழ்வடிவம் இது. பேராசிரியர் பாண்டியன் தன்னுடைய ஆய்வுக்கட்டுரைக்குக் கொடுத்ததலைப்பு Being ‘Hindu’ and Being ‘Secular’ (Tamil ‘Secularism and caste politics) எனபதாகும். இதை அப்படியேதமிழில் சொல்வதென்றால், ‘இந்துவாக’ இருந்து கொண்டே ‘மதச்சார்பற்று’இருப்பது (தமிழர் ‘மதச்சார் பின்மையும்’ ஜாதிஅரசியலும்) என்பதாகும்.

அரசூர் அ.பா.சிவா

**தோழர்களை உறவுகளாக்குவோம் !**
**உறவுகளை தோழர்களாக்குவோம் !!**

# சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு



இவை இரண்டுமே செயலளவில் வெவ்வேறு வேலைத்திட்டங்களாக இருந்தாலும், அதன் நோக்கங்கள் ஒன்றேதான்.

''பையன் சாமி இல்லையின்னு சொல்றான்.. ஒரு நாள் சாமி அவனுக்கு நல்ல புத்தியை கொடுத்துடுமுன்னு எனக்கு நம்பிக்கையிருக்கு முதல் தலைமுறையாக பெரியாரியலை ஏற்றுக் கொண்ட ஒருவன் தன் ஆரம்ப நாட்களில் இது போன்ற மதிப்பீடுகளால்தான், அவனுடைய குடும்ப, சமூக அமைப்புகளால் பார்க்கப்படுவான். அடுத்தடுத்த செயல்களில் கொள்கை உறுதியோடு நின்று ஜாதி மறுத்து திருமணம் செய்தோ அல்லது சொந்த சாதியை எதிர்த்துப் போராடும் போதோ தான் அவனுடைய ஜாதியும் குடும்பமும் அவனைப்புறக்கணிக்கும் .

தமிழ்நாட்டுச் சூழலில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் வெவ்வேறு பிரிவுகளின் வெவ்வேறு பொருளாதார நிலைகளிருந்து பெரியாரியலை கொள்கையாக ஏற்றுக்கொண்டு தொடர்ந்து போராடி வருபவர்கள் எண்ணிக்கை அடிப்படையில் மிகக் குறைவே.

**அன்று அப்பாவோடு .**
**கை கோர்த்தபடி**
**மாமா ஊருக்கு ..**
**இன்று என் மகளின்**
**பயணம் மாமா சேரிக்கு**
**நாளை**
**ஊரும் சேரியும்**
**ஒரே இடத்தில் .**

வழக்கத்தில் சிறுபான்மை மக்கள் கூட அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள மதத்தின் அடையாளத்தோடே சமூகத்தால் பார்க்கப்படுகிறார்கள். ஆனால் இங்குள்ள பெரியாரியல்வாதிகள் அதிகபட்சம் இந்து மத எதிர்ப்பாளர்களாக இருந்தாலும் இந்துக்களாகவே பார்க்கப்படுகிறார்கள். அதற்கு முக்கியக்காரணம் பெரும்பான்மை மக்கள் பெரியாரியல்வாதிகளை வெறும் கடவுள் மறுப்பாளர்களாக மட்டுமே பார்க்கிறார்கள்.

ஜாதி, மத எதிர்ப்பு வெறும் கொள்கையளவில் மட்டுமே இங்கு நின்று

விடுகிறது அது வாழ்வியலாக மாற வேண்டும். அப்படியான வாழ்வியலை வகுக்கவே முதலில் சொன்ன தோழர்களை உறவுகளாக்குவோம் என்ற நிலைப்பாடு தேவைப்படுகிறது..

இப்படியான வாழ்வியல் முறைக்கு தயார்படுத்திக் கொள்ள நம்மை நாமே புதுப்பித்துக்கொள்வது அவசியம். நம் பழைய அபிப்பிராயங்களை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஜாதி ஒழிப்பிற்காக, புறம் சார்ந்த பல்வேறு போராட்டங்களை தோழர்கள் நடத்தியுள்ளனர். சில போராட்டங்களில் வெற்றியும் பெற்று உள்ளனர். அப்படிப்பட்ட தோழர்கள் கூட, அவர்கள் சார்ந்த ஜாதியாகவே பல இடங்களில் பார்க்கப்படுகிறார்கள். அடிப்படையான தோழர்கள் முதல் திராவிடர் இயக்கத் தலைவர்கள் வரை இதற்கு விதிவிலக்கல்ல. அப்படி ஜாதிய அடையாளத்தோடு பார்க்கப்படாத ஒரே தலைவர் பெரியார் தான். ஏனென்றால் பெரியார் மட்டுமே பண்பாட்டுத் தளத்திலும் கடுமையாக உழைத்தவர்.

பெரியார் கூறுகிறார்.

**பழைய அபிப்பிராயங்கள் எல்லாம் , அது எதுவானலும் அடியோடு பரிசோதிக்கப்பட வேண்டும்; பரிசோதிக்க சற்றும் பயப்படக்கூடாது அப்படிப் பரிசோதிப்பதிலும் நடுநிலைமையிலிருந்து பரிசோதிக்க வேண்டும். அந்தப்படி பரிசோதிக்கப் பின்வாங்குகின்றவன் யாராயிருந்தாலும் கோழையேயாவான்.**

நமக்கு முன்னால் இருந்த மனிதர்களை விட நாம் விசேஸ அனுபவமும் ஞானமும் உடையவர்களென்று சொல்லிக் கொள்ள பாத்தியதையுடையவர்கள் என்பதை ஞாபகத்திலிறுத்தாதவன், மனிதத் தன்மையுடையவனாக மாட்டான். அன்றியும், இந்தக்காலம் அனுபவத்தின் மேல் அனுபவம் என்கிற முறையில் புதிய புதிய தத்துவங்கள் வளர்ந்து வந்த காலமுமாகும். மேலும், இப்போதுள்ளவர்கள் பல வழிகளில் இயற்கையாகவே முற்போக்கும், அறிவு விளக்கமும், அனுபவப் பயிற்சியும் பெற்றுவருகிற சந்ததியில் பிறந்தவர்களுமாய் இருக்கிறார்கள்.

ஆகவே, இயற்கையாகவும், செயற்கையாகவும், முன்னோர்களைவிட நாம் எந்தவிதத்திலும் அறிவிலோ, ஆராய்ச்சியிலோ இளைத்தவர்கள் அல்லர் என்பதையும், கால வேறுபாட்டிற்கும் காட்சி வேறுபாட்டிற்கும் தகுந்தபடி கருத்து வேறுபாடு அடைய வேண்டிய உரிமையும் அவசியமும் உடையவர்கள் என்பதையும் நாம் நன்றாக உணரவேண்டும்.

இந்த நிலையில் இருந்துகொண்டு பார்த்தோமானால், முன்னோர் சொன்னவைகள் என்பவற்றிற்கு எவ்வளவு மரியாதை கொடுக்கலாம் என்பது தானாகவே விளங்கிவிடும்.

முன்னோர் கருத்துக்கு அடிமையாய் இருந்தோமானால், உண்மையையும் அறிவு வளர்ச்சியையும் நாம் அடியோடு கொன்று விட்டவர்களாவோம். குடி அரசு - 29.03.1931

மூன்றாம் தலைமுறை பெரியாரியல் வாதிகள் அதாவது பெரியாரின் மறைவுக்குப் பின் பிறந்தவர்கள். நம் முன்னோடிகள் பெரிதாகக் கவனத்தில் கொள்ளாத வாழ்வியல் சார்ந்த தளங்களில் தெளிவானதொரு நடைமுறையை வகுக்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்பதை நினைவில் கொள்வோம் .



நமது கருஞ்சட்டைக் குடும்பத்தைச் சேர்ந்த தோழர் நீ.இளங்கோ அவர்கள் சிவகங்கையில் உள்ள கற்பூரசுந்தர பாண்டியன் நினைவு மேனிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சிவகங்கை மாவட்ட அமைப்பாளராக நம்முடன் இணைந்து களப்பணியாற்றியவர். தமிழகத் தமிழாசிரியர் கழகத்திலும் சிறப்பாக இயங்கி வந்தார். தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளர்களுடன் இணைந்து தமிழாசிரியர்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து உழைத்துவந்தார். அண்மையில் தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் திருச்சியில் நடைபெற்றது. அந்தத் தேர்தலில் தோழர் இளங்கோ தலைமையிலான அணி வெற்றிபெற்றது. நமது தோழர் இளங்கோ தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் மாநிலப் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக பகுத்தறிவாளர்களும், பெரியாரியலாளர்களும் தமிழகத்தமிழாசிரியர் கழகத்தில் பொறுப்பாளர்களாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அந்த வரிசையில் முழுமையாக எந்த நேரமும் கருஞ்சட்டையோடு வலம்வரும் தோழர் இளங்கோ பொதுச்செயலாளராகி உள்ளார். பெரியார் வழியில் தமிழாசிரியர்களுக்குப் பணியாற்றிடவும், பெரியார் காலத்தைப்போல தமிழாசிரியர்களும் சமுதாயப் பணியை மேற்கொள்ளவும் ஒரு இணைப்புப்பாலமாக தோழர் இளங்கோ பணியாற்ற காட்டாறு வாழ்த்துகிறது.

# குழந்தைகளை மதிப்போம்

நாம் பொதுவாக குழந்தைகளை நமது வீடுகளில் பள்ளிகளில் எங்கனம் நடத்துகிறோம் என கொஞ்சம் அசை போட்டுப் பார்ப்போம். பள்ளிகளைப் பொறுத்தவரை குழந்தைகள் மேய்க்கப் படக்கூடியவர்கள். பெற்றோர்களாகிய நாமும் குழந்தைகளை கால்நடைகளைப் போல மேய்க்கக் கூடியவர்களாகவே அணுகுகிறோம். "அதுகளை மேய்க்கிரதுகுள்ள என் உயிர் போகிறது" என அங்கலாயித்துக் கொள்ளும் அம்மாக்களே அதிகம். "குழந்தைகளைப் பேணுவது என்பதே பெண்களின் பணிதான்" என்ற ஆழமான கருத்தாக்கத்தில் ஆண்கள் அனைவரும் உள்ளனர். இத்தகைய பின்னணியில் குழந்தைகளைச் சரியாக கணிக்கத் தவறுகிறோம். பெற்றோராக, ஆசிரியராக, களப்பணியாளராக உள்ள பலரும் அவர்களின் குழந்தைகள் பற்றிய அணுகுமுறை எதுவெல்லாம் சரியென்று நினைத்து கொண்டிருக்கிறார்களோ அவையெல்லாமே மாற்றப்பட வேண்டியவை. அவற்றை நாம் பரீசிலனை செய்தாக வேண்டும். அப்போதுதான் பெற்றோர் - ஆசிரியர் - குழந்தைகள் உறவு முறைகள் சீராக அமைய முடியும்.

நாம் நமது குழந்தைகளைப் பற்றி அறிவதற்கு முன்பாக நம்மைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நாமும் குழந்தையே. நாம் நமது ஒவ்வொரு நடவடிக்கைகளும் குழந்தைகள் மிக உன்னிப்பாக கண்காணிக்கின்றனர். ஆக நமது நடவடிக்கைகளை நாம் வடிவமைத்துக்கொள்ள வேண்டும். நாமும் நம்மை ஒரு குழந்தையாக பாவித்து வடிவமைத்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் மென்மையானவர்கள் அவர்களின் மென்மையான குழந்தைமையை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்களை மதிப்பதில் வெற்றி பெற முடியும். இளமையான பெற்றோர்களுக்கு குழந்தைகளின் புன்னகை அழகான சிரிப்பு மட்டுமே பிடிக்கிறது. அழுகை பிடிப்பதே இல்லை. அழும் குழந்தைகளையும் பிடிப்பதில்லை. குழந்தைகள் நாளைய மனிதர்கள் எனச் சொல்லி விடமுடியாது. அவர்கள் இன்றைய மனிதர்கள். இன்றைய சூழலுக்கு ஏற்றவாறு அவர்களை நாம் அணுகவேண்டும். குழந்தைகள் பொய் சொல்ல விரும்ப மாட்டார்கள். பெரியவர்களாகிய நாம் உண்மையை உரைக்க விடாமல் தடுக்கும் போது அவர்கள் நேர்மையை உரைக்கும் விதமாக மௌனம் காப்பார்கள்.

மேலும் உலகில் உள்ள கொடூரங்களில் முதன்மையானது ஒரு குழந்தை தன்னுடைய அம்மா, அப்பா மற்றும் ஆசிரியர்களுக்கு பயப்படுவதாகும். அவ்வாறு பயமின்றி அவர்கள் பழக உரையாட நட்புக்கொள்ள சமூக நடைமுறைகளும் கல்வி படிநிலைகளும் அனுமதி



அளிப்பதில்லை. அதனை உடைத்து குழந்தைகளை நமக்கு சரிசமமாக மதிக்க நாம் முயலவேண்டும். குழந்தையின் நம்பிக்கையே நமக்கு மிக உயர்ந்த விருதாகும்.

வளர்தல் என்ற சிக்கலான விசயத்தில் குழந்தை பல்வேறு படிநிலைகளைக் கடந்து வரவேண்டியதாக உள்ளது. அத்தகைய போக்கில் நம்முடன் நட்பான ஒரு உறவைப் பேண அவர்களை மதிப்பது அத்தியாவசியக் கடமையாக நமக்கு உள்ளது. குழந்தைகளின் விருப்பமான உலகை நாம் மதிக்க வேண்டும்.

**உலகில் உள்ள கொடூரங்களில் முதன்மையானது ஒரு குழந்தை தன்னுடைய அம்மா, அப்பா மற்றும் ஆசிரியர்களுக்கு பயப்படுவதாகும். அவ்வாறு பயமின்றி அவர்கள் பழக, உரையாட நட்புக்கொள்ள சமூக நடைமுறைகளும் கல்வி படிநிலைகளும் அனுமதி அளிப்பதில்லை.**

மதிப்பது என்பது அவர்களது உலகை அதில் நடக்கும் சிறுசிறு சம்பவங்களை காதும் நேரமும் கொடுக்க வேண்டும். அதுவே அவர்களை மதிக்கும் மொழியாகும்.

குழந்தைகள் இன்றைய தினம் விளையாடும் பொருட்கள் அனைத்தும் நாளைய தினம் அவர்களது நினைவு பொக்கிஷங்களாக மாறும். காரணம் நமது நேற்றைய விளையாட்டுப் பொருட்கள், விளையாட்டுகள் இன்றைக்கும் நமது நினைவை விட்டு நீங்காத நிகழ்வுகளாக உள்ளன. அதேபோல் இன்றைய நமது குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள்,விளையாட்டுகள் அனைத்திற்கும் மதிப்பளித்து அவர்களுடன் நமது நேரத்தைச் செலவிட வேண்டும்.

"வேலை" செய்வது குழந்தைகளின் வேலை அல்ல. அவர்கள் விளையாடுவதே சிறந்த வேலையாக உள்ளது. ஆம் குழந்தைகளின் பல விளையாட்டுகள் வேலையின் தன்மையைக் கொண்டதே.எனவே சிறு சிறு வேலைகள் செய்யும் சிறு பணியாளராக குழந்தைகளை நாம் மாற்றாமல் இருக்க வேண்டும்.

சரி, குழந்தைகள் செய்வது அனைத்தையும் நாம் அனுமதிக்க வேண்டுமா என்றால் முடியாது. குழந்தைகளுக்கு தங்களுக்கு தாங்களே சுயக்கட்டுப்பாடும் சுய மறுதலிப்பும் செய்யும்வண்ணம் அவர்களிடம் அவர்களது போக்கிற்கு ஏற்றவாறு பேசி சிலவற்றைத் தடை செய்யவேண்டும். இதன் மூலம் குழந்தை மெதுவாக தன்னையறியும். அதையும் மீறி குழந்தை தவறு இழைக்கும் போது, தான் செய்யும் தவறு கடைசி முறை அல்ல என்பதை அறிந்தே தவறிழைக்கிறது. ஆனால் ஏதேனும் ஒரு சூழல் தவறு செய்ய உந்துகிறது அல்லது சிலர் அதை தூண்டும் வண்ணம் பேசுகின்றனர்.

குழந்தைகள் நாம் செய்யும் செயல்பாடுகளுக்கு அவர்களால் தடை ஏற்படும்போதும், அவர்கள் நம்மை இடையூறு செய்யும்போதும் நமது கவனத்தைக் கவருகின்றனர். கோபம் காட்டுகிறோம். அதையே அடிக்கடி அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டே உள்ளோம். ஆனால் அவர்களின் அமைதியான தீவிரமான அன்பான முகங்களை நாம் போற்றத் தவறி விடுகிறோம்.

எளிய அப்பாவிகளான குழந்தைகளின் ஒப்புதலையோ ஆலோசனைகளையோ நாம் நேரம் ஒதுக்கி கேட்கத் தயாராய் இல்லாத போது குழந்தைகள் நம்மிடம் எதை பகிர்ந்துகொள்ளப் போகிறார்கள். நாம் குழந்தைகள் மத்தியில் எபோதும் கண்டுபிடிப்பளாராக இல்லாமல் எப்போதும் ஆய்வாளராக இருக்கவேண்டும். அப்போதுதான் குழந்தைகள் இயல்பான நமது குழந்தைகளாக இருப்பார்கள் இல்லையெனில் பிறரால் உருவாக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

குழந்தைகள் நம்மிடம், பிறரிடம் மதிப்பு இழக்கவே செய்கின்றனர். அவர்களை நாம் கொஞ்சுவது என்பதும் அவர்கள் விரும்பும் அனைத்துப் பொருட்களையும் வாங்கி அளிப்பது என்பது குழந்தைகளின் உலகத்தில் அர்த்த மற்றவை ஆகும். அவர்களை மதித்து உரையாடும் நபர்களே மதிப்பிற்குரியவர்கள் ஆவர்.

குழந்தைகளின் பெருவிருப்பம் என்பது நாம் அளிக்கும் மரியாதை நம்பிக்கை அன்பு ஆகியவையாகவே உள்ளது. அதை அளிப்பதும் உறுதிப்படுத்துவதும் நமது கடமையாகும்.



குழந்தைகள் நாளைய மனிதர்கள் எனச் சொல்லி விட முடியாது.

அவர்கள் இன்றைய மனிதர்கள்.

இட்ரீஸ் காந்த் ( Idrees Kanth )
தமிழில்: ஜோன்சன் ஜெய்சிங்

# எம்.எஸ்.எஸ்.பாண்டியன் மிகமுக்கியமானவர், ஏன்?

உங்களில் பலபேருக்கு அவரைப்பற்றித் தெரியாமல் இருக்கலாம்.அவருக்கு வயது 57. கடந்த நவம்பர் 10-ம் தேதியன்று புதுடெல்லி எய்ம்ஸ் (AIIMS) மருத்துவமனையில் அவர் காலமானார் .அவரது பணிகளைப் பற்றி அறியாதவர்களுக்கு ஒரு சிறு அறிமுகம் இது. நண்பர்களாலும் சகாக்களாலும் பாண்டியன் என்றுஅழைக்கப்பட்ட எம்.எஸ்.எஸ்.பாண்டியன் (மத்தியாஸ் சாமுவேல் சௌந்திர பாண்டியன்), டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின், வரலாற்று ஆய்வு மையத்தில் (Center for Historical Studies – CHS), சமகால வரலாறு குறித்தான வகுப்புகள் எடுத்தவர். அவர் ஒரு மிகச்சிறந்த அறிஞர், முதல்தரமான ஆய்வாளர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை, அதே நேரம் பின்தங்கிய சமூகப்பின்னணியில் இருந்து வருகிற ஒருவர், உயர்வர்க்க அறிவுஜீவிகள் இடையே தன்னை நிரூபித்துக்கொண்டு செயல்படுவதற்கு எவ்வளவு இழப்புகளையும் போராட்டங் களையும் சந்திக்க வேண்டியி ருக்கிறது என்பதை நமக்கு உணர்த்தியவராக இருந்தார்.

இந்தக் கட்டுரையில் அவருடைய கல்வித்திறமை பற்றிச் சுருக்கமாக விளக்க முயற்சிக்கிறேன். மிக முக்கியமாக எனக்குத் தெரிந்துகொள்ள வாய்ப்புகிடைத்த அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றியும் கொண்டுவர விரும்புகிறேன். இது தவிர, அவர் எதிர்கொண்ட சில இடர்ப்பாடுகள் குறித்தும் எழுதுகிறேன். ஒடுக்கப்பட்ட, விளிம்புநிலை மக்களுக்காகப் பேசுவதானாலும் சரி அல்லது சுயநிர்ணய உரிமைகோரி காஷ்மீரில் நடக்கும் போராட்டங்களுக்காகப் பேசுவதானாலும் சரி, எப்போதும் தனது அரசியல் கருத்துக்களை உரக்கச் சொன்னவர்.

பாண்டியன் தன்னுடைய ஆரம்பகால ஆய்வுகளை பொருளியல் வரலாறு என்ற துறையில் மேற்கொண்டார். சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (Madras Institute of Development Studies) தன்னுடைய முனைவர்பட்டத்திற்காக, தெற்கு திருவிதாங்கூர் பற்றிய மிகச்சிறப்பான ஓர் ஆய்வினை செய்தார். பின்னர் 1990-ல் அது புத்தகமாக (The Political Economy of Agrarian Change: Nanchilnadu 1880-1939) வெளிவந்தது .அதுவரை ஒப்பீட்டளவில் எந்த சமூக ஆய்வாளரும் தொட்டிருக்காத சூழலியல் காரணிகளையும் சமூகக் கட்டுமானத்தையும் இந்தப் புத்தகத்தின் மூலம் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.'கள நிலைகளைச்' சரியாகப் புரிந்துகொள்ளாத 'விவசாய இயக்கங்களின்' ஒருங்கிணைப்பாளர்களை இந்தப் புத்தகத்தில் அவர் விமர்சித்திருந்தார்.

திரைப்படங்கள், அவை ஏற்படுத்திய பொது, கலாச்சார விளைவுகள் குறித்து அவர் செய்த மற்றொரு சிறந்த ஆய்வு அடுத்த சில ஆண்டுகளில் அவரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. அவரது அந்த உழைப்பு இன்னொரு புத்தகமாக 1992-ல் வெளிவந்தது (The Image Trap: M G Ramachandran in Film and Politics). தமிழ்ச் சமூகம் மற்றும் அரசியலில் மிக முக்கியத்துவம் வாய்ந்த கலாச்சார நிகழ்வினை ஆய்வதாக இந்தப் புத்தகம் அமைந்தது.

அந்தக் காலகட்டத்தில் அவர் முதலில் பணியாற்றிய சமூக அறிவியலுக்கான கல்வியியல் மையம், கல்கத்தா (Centre for Studies in Social Sciences, Calcutta), -விலிருந்து, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வந்து விட்டார். பின்னர் 2001-ல் இந்தப் பணியிலிருந்து வெளியேறி தனித்தியங்கும் கல்வியாளராக செயல்பட்டுவந்தார்.அமெரிக்காவில் இருக்கும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் செய்தார். வகுப்புகளும் எடுத்தார். இவை தவிர, ஆக்ஸ்போர்ட் மற்றும் கேம்ப்ரிட்ஜ் (Oxford and

**JNU, பார்ப்பதற்கு அனைவருக்கு மான உலகமாகத் தோன்றினாலும், ஒரு பகுதி மக்களை நாசூக்கான வழிமுறைகளில் மதிப்பற்றவர்களாக நடத்திக்கொண்டிருந்தது. இதனாலேயே பாண்டியன், அதனுடன் தன்னை இணைத்துக் கொள்ள முடியாமல் இருந்தார்.**

Cambridge)பல்கலைக்கழகங்களிலும் கல்வி மற்றும் ஆய்வுப்பணிகளில் சேர்ந்து இயங்கிவந்தார். அவரது கல்வி மற்றும் ஆய்வுப்பணிகளின் மூலம் கண்ட முடிவுகளைக்கொண்டு, தென்னிந்தியாவின் பார்ப்பனரல்லாதோர் இயக்கம் குறித்த அவருடைய அடுத்த புத்தகத்தை 2007-ல் வெளியிட்டார் . Brahmin and Non-Brahmin: Genealogies of the Tamil Political Present என்றஅந்தஆய்வுநூல் அதிகாரமற்ற கீழ்நிலை மக்கள் குறித்த ஆய்வுகளில் (subaltern studies) முக்கியப் பங்களிப்பாகக் கருதப்படுகிறது.

2009ஆம்ஆண்டு டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் (JNU), வரலாற்று ஆய்வு மையத்தில் (CHS) பேராசிரியராக இணைந்தார்.பாண்டியன் சமத்துவவாதியாகவும் மிகவும் தாராள குணம் கொண்டவராகவும், முடிவில்லாத உரையாடல்களுக்கு எப்போதும் தயாராகவும் இருந்தார். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மிகக்குறுகிய காலத்தில் அனைவரிடமும் பிரபலமாகி விட்டார். அவருடைய வகுப்புகளில் அவர் நிகழ்த்தும் உரைகளுக்காகவும் அவர் மிகவும் பிரபலமாகியிருந்தார். தான் எடுக்கப்போகும் வகுப்புகளுக்காக மிகக் கவனமாகவும் கடுமையாகவும் உழைத்தார். வகுப்புகளில் மாணவர்களுக்கு புதிய கோணங்களில் விளக்கங்கள் கொடுப்பவராகவும் கேட்டறிந் திராத புதியபுத்தகங்களை அறிமுகப்படுத்து பவராகவும் இருந்தார்.

ஒவ்வொருமுறை வகுப்பெடுக்கச் செல்லும்போதும், பதற்றமாக உணர்ந்ததாக அவர் என்னிடம் கூறியிருக்கிறார். சரியான முறையில் தான் எடுத்த வகுப்புகளுக்காக மிகவும் திருப்தியாக உணர்வார். வரலாற்று ஆய்வு மையத்தில் (CHS) அவர் வகுப்பு எடுக்கும் தலைப்புகளில் ஒன்று, "சாதி, கலாச்சாரம் மற்றும் சமூகம்: நவீன இந்தியாவின் அறிவுசார் மாற்று வரலாறு" (Caste, Culture and Community: An Alternative Intellectual History of Modern India). பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்களும் இதில் ஆர்வத்துடன் கலந்துகொள்வார்கள். தொடக்கக் காலங்களில் அவர் இந்த வகுப்புகளை எடுத்தபோது ,அவர் முன்வைத்த மாற்று வரலாற்றின் உள்ளடக்கத்தால், பல்கலைக்கழக அதிகார மையத்தால் பிரச்சினைகள் ஏற்பட்டது. துறைசார்ந்த குழுவினால் அந்த வகுப்பானது சீராய்வு செய்யப்பட்டது பின்தொடர்ந்தது. ஒருவேளை இந்த 'மாற்று'க்கான அவரது தொடர்ச்சியான தேடல்தான், பொதுத் தளத்தில் இடையீட்டை நிகழ்த்துவதற்கான அறிவுக்கூர்மையை அவருக்கு வழங்கியது எனலாம்.

ஜவகர்லால்நேருபல்கலைக்கழகத்தில், அவரது முதல் ஆராய்ச்சி மாணவன் நான்தான். அதனை நான் எப்போதுமே பெருமையாக நினைத்திருக்கிறேன். என்னுடைய படிப்புகளைத் தொடர ஐரோப்பாவிற்குச் சென்றபிறகும்கூட, அதனை நான் அவருக்கு நினைவூட்டிக் கொண்டே இருந்திருக்கிறேன். நான் படிப்பில் மோசமில்லை என்றாலும், வரலாற்று ஆய்வு மையத்தில் (Center for Historical Studies - CHS) எனது ஆரம்பகால அனுபவங்கள் இனிமையானவையாக இல்லை. எனது நண்பரும் நலம் விரும்பியுமான உமா சக்கரவர்த்தி என்பவர்தான், பாண்டியனைப் பரிந்துரைத்தார். எனது ஆராய்ச்சிக்கு ஒருவேளை அவர் மேற்பார்வையாளராக விருப்பம் தெரிவிக்கக் கூடும் என்று சொல்லிஅவரிடம் பேசச்சொன்னார். சிறிய பரிசீலனைக்குப் பிறகு, பாண்டியன் எனது ஆய்வுக்கான அறிவுரை யாளராக இருக்க ஒத்துக்கொண்டார். இவ்வாறு அவருடனான எனது பயணம் தொடங்கியது. அவருடனான எனது உறவில் எதைப்பற்றியும் உரையாடவும் சுதந்திரமும் இணக்கமான சூழ்நிலையும் நிலவியது . அது, கல்வி தொடர்பான செய்திகளானாலும் சரி, தனிப்பட்ட விசயங்களானாலும் சரி. இந்த மாதிரி ஒரு சூழ்நிலை எனக்கு மட்டுமே வாய்த்துவிடவில்லை. இதே மாதிரியான சூழ்நிலையை, மற்ற மாணவர்களிடமும் ஆய்வாளர்களிடமும் பாண்டியன் ஏற்படுத்தி யிருந்தார்.

வீரியத்துடனும் பேரார்வத்துடனும் வகுப்புகள் எடுத்தாலும், எண்ணற்ற

மாணவர்களுக்கு வழிகாட்டியாய் விளங்கினாலும், பாண்டியனுக்கு JNU-வில் இருந்த காலம் முழுவதுமே மகிழ்ச்சியானதாகவும் இணக்கமான சூழ்நிலையிலும் இருந்ததில்லை. கடைசி நான்கு ஆண்டுகளில் பலமுறை, தனது பணியை விட்டுவிடுவது பற்றிப் பேசியிருக்கிறார். JNU, பார்ப்பதற்கு அனைவருக்குமான உலகமாகத் தோன்றினாலும், ஒரு பகுதி மக்களை நாசூக்கான வழிமுறைகளில் மதிப்பற்றவர்களாக நடத்திக் கொண்டிருந்தது. இதனாலேயே பாண்டியன், அதனுடன் தன்னை இணைத்துக் கொள்ள முடியாமல் இருந்தார். அவருடைய பழைய மாணவர் ஒருவர் இவ்வாறு சொன்னார் 'பாண்டியன் தன்னுடைய கடைசி சிலமாதங்களில், தான் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகுவதாகவும் தனிமைப்படுத்தப் படுவதாகவும் உணர்ந்தார். எல்லோரையும் சமமாக நடத்தப்பட வேண்டிய இடங்களில்கூட, ஒருவர்வெளியில் தெரியாத அச்சத்துடனும் மனஉளைச்சலுடனும் வாழவேண்டியிருப்பதை அவர் புரிந்துகொண்டிருந்தார்'. இங்கேதான் நான் என்னைப் பாண்டியனுடன் நெருக்கமாக உணர்ந்தேன்.

பொதுவாகவே, JNU மாதிரியான உயர்கல்வி நிலையங்களில் பணியாற்றும் கல்வியாளர் களுக்கென்று சில குணங்களுண்டு, அவர்கள் மாணவர்களோடு கலந்திருப்பதில்லை, ஒருவிதமான சமாளிக்கும் விதத்திலான அணுகுமுறையோடு நின்றுவிடுவார்கள். ஆனால், பாண்டியன் வித்தியாசமானவர். அவர் பல சமயங்களில் உணர்ச்சிவயப்படக் கூடியவராகவும், செய்கின்ற வேலைகளில் ஆழமான ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். 'முழக்கங்கள் எழுப்பி ஓய்ந்துவிடாமல், தன்னுடைய சில அரசியல் நோக்கங்களில் பற்றுறுதிகொண்டவராக இருந்தார்', இது அவரைப்பற்றி அவருடன் பணியாற்றிய பேராசிரியர் எழுதியது. மற்ற எவரும் செய்யமுடியாத அளவிற்கு, தனக்கென வகுத்திருந்த திடமான நம்பிக்கைகளுக்கு நிகராக வாழ்ந்து காட்டியவர்.அதனாலேயே அதற்கான விலையையும் கொடுக்கவேண்டியிருந்தது. அதைப்பற்றி அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை, ஆனால் இதன் விளைவுகளை அவர் உணர்ந்தே இருந்தார்.

அண்மையில் எனது தனிப்பட்ட வேலைக்காக டெல்லி சென்றிருந்தேன். வழக்கம்போல, இம்முறையும் அவரை JNU பல்கலைக்கழக வளாகத்திலிருந்த அவரது இருப்பிடத்திற்குச் சந்திக்கச் சென்றிருந்தேன். அவர் என்னை அங்கேயே சிலநாட்கள் தங்குமாறு கேட்டுக்கொண்டார். அதனால், எனது பயண திட்டத்தை சிறிது காலம் நீட்டிக்க வேண்டிய தாயிற்று. அடுத்த பதினேழு நாட்களும் அவரை மிக அருகில் இருந்து கவனிக்க முடிந்தது, கொஞ்சம் தென்னிந்திய உணவு வகைகளையும் ருசிபார்க்க வாய்ப்பு கிடைத்தது.இந்த நாட்களில் அவருடன் நிறைய உரையாடல்களை நிகழ்த்த முடிந்தது.அவை, பெரும்பாலும் மிக நெருங்கிய நண்பர்களுக்கிடையே நிகழ்வது போன்றும், பழைய நினைவுகளை கிளறிப் பார்ப்பது போன்றுமிருந்தன. அவர் தனது பழைய நட்புகளை நினைவுகூர்ந்தார்;

**அவருடைய சமூகப் பின்னணி காரணமாக, ஓரங்கட்டப்படுகிற உணர்வையும் அதன் விளைவுகளையும் அவரால் கடந்துபோகவே முடியவில்லை. ஏனென்றால், டெல்லியில் உயர்வர்க்க கல்வியாளர்கள் வட்டத்தில், சமூகப் படிநிலைகளே அதிகம் மதிக்கப்படுகின்றது. 'அதிகாரமிக்க பேராசிரியர்களை எதிர்கொள்வது மிகவும் சிக்கலானது, அவர்கள் வலைப்பின்னல்போல இணைந்திருக்கிறார்கள்'**

அவர் பார்த்து வியந்த மனிதர்களைப் பற்றி; கடின சூழ்நிலைகளை எதிர்கொண்டு கிட்டத்தட்ட தனிமையிலேயே வாழ நிர்ப்பந்திக்கப்பட்ட தோழர்களைப் பற்றி; அவரது குடும்பத்தைப் பற்றி; அவரது மகளின் படைப்புத்திறன் பற்றி; அவருடைய சித்தப்பா சாம் ராஜப்பாவின் பத்திரிகைத்துறை சாதனைகளைப் பற்றி, என பலவற்றையும், உணர்ச்சிவயப்பட்டு சில நேரங்களில் அவராலேயே சமாளிக்க முடியாத ஒரு தொனியில்பேசினார்.

இது மற்ற JNU பேராசிரியர்களின் இயல்பிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அவர்கள் பொதுவாழ்க்கையையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் எப்போதும் பிரித்தே வைத்திருப்பார்கள். சில தருணங்களில்



பாண்டியன் அவர்கள், உணர்ச்சி மேலோங்கி கண்களில் நீர் தழும்ப நின்றிருப்பது போன்றே தோன்றியது. எங்கள் கல்வி குறித்தான விசயங்களைத் தவிரவும் அவரிடம் பகிர்ந்துகொள்ள நானும் நிறைய செய்திகளை வைத்திருந்தேன். என்னுடைய விரக்தியான சூழ்நிலைகள், என்னுடைய கோபம், என்னைச் சூழ்ந்திருந்த சிரமங்கள் இவற்றைப் பகிர்ந்துகொண்டேன். என்னை மன திடத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருக்குமாறு கேட்டுக்கொண்டார். எனக்கு ஒரு மேல்சட்டையையும் (T-Shirt) பரிசளித்தார். இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், உள்ளார்ந்து அவர் தடுமாற்றத்தில் இருப்பதாகத் தெரிந்தது. மிகக் குறைவான உணவே உண்டார், குறைவாகவே உறங்கினார், வேலையில் ஒழுங்காகக் கவனம் செலுத்த முடியவில்லை என்று குற்றவுணர்வுடன் கூறினார்.

இந்த உணர்விலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முடியாத அவரது நிலை, அவரிடமிருந்த மென்மையாக உணர்வின் காரணியை மேலோட்டமாக என்னால் உணர முடிந்தது. அதுதான் அவரது அமைதியின் மைக்குக் காரணம். இதன் பின்புலத்தில் CHS இருக்கிறது. பாண்டியன், அவரது கல்விக்கான அங்கீகாரத்தை அடைந்துவிட்டார், அவருடைய ஆய்வுப் புலமையை பரவலாக அனைவரும் ஏற்றுக் கொண்டும் விட்டனர், சிறப்புப் பேராசிரியருக்கான அழைப்புகள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்து அவருக்கு வந்துவிட்டன. சில பன்னாட்டுக் குழுக்களில் அறிவுரை கூறும் பதவிகளில் இருந்தார். அப்படிப்பட்ட பாண்டியன் எதற்காக பருந்துக்கு பயந்தோடும் இரைபோல உணர்ந்து வருந்தவேண்டும்?

அவருடைய சமூகப் பின்னணி காரணமாக, ஓரங்கட்டப்படுகிற உணர்வையும் அதன் விளைவுகளையும் அவரால் கடந்துபோகவே முடியவில்லை. ஏனென்றால், டெல்லியில் உயர்வர்க்க கல்வியாளர்கள் வட்டத்தில், சமூகப் படிநிலைகளே அதிகம் மதிக்கப்படுகின்றது. ‘அதிகாரமிக்க பேராசிரியர்களை எதிர் கொள்வது மிகவும் சிக்கலானது, அவர்கள் வலைப்பின்னல்போல இணைந்திருக்கிறார்கள்’ என்று (CHS குறித்த ) எங்களது உரையாடல் ஒன்றில் அவர் கூறினார்.

பாண்டியனும் எங்களில் சிலருக்கு அமைந்த சமூகப் பின்னணியிலிருந்து வந்தவர்தான். எளிமையான மன உணர்வுகள், JNU மாதிரியான இடங்கள் தூண்டிவிடக்கூடிய தனிநபர் சிக்கல்கள், குடும்ப மற்றும் சமூகக் கடமைகள், ஒழுக்கம் குறித்தான உலகப்பார்வை, பொருளாதார பாதுகாப்பின்மை இப்படி பல விசயங்களை கல்வித் தேடலுக்காக சமரசத்திற்கும் கேள்விக்கும் உள்ளாக்க வேண்டியிருந்த சூழலில் அவர் பணியாற்றினார். குறிப்பிட்ட சமூக மற்றும் வர்க்கப் பின்னணி கொண்டவர்களுக்கு இந்தச் சமரசங்களும் கேள்விகளும் எளிமையாக இருப்பதில்லை, சுமக்கமுடியாத பாரங்களோடுதான் கல்வித் தேடலைத் தொடர வேண்டியிருக்கிறது.

அதேநேரம், வாய்ப்புகள் அதிகம் கிடைக்கப்பெற்றவர்கள், தனித்தியங்குகிறார்கள். மற்றவர்களிடமிருந்து தங்களை அதிகம் வேறுபடுத்திக்கொள்ளக் கற்றுக்கொள்கிறார்கள். தங்களையும், முன்னுரிமை கொடுக்க வேண்டிய விசயங்களையும், தாங்கள் சார்ந்திருக்கும் பொறுப்புகளையும் நிர்வகிக்கும் திறனில் சிறந்து விளங்குகிறார்கள். உங்களிடம் சொல்லப்பட வேண்டிய கருத்து இதுதான். நம்மைப்போன்ற நபர்கள் கல்வியில் திறன் அடைவதில் இருக்கும் சிக்கல்கள் என்ன என்பதுதான். இதனால்தான், பாண்டியன் மிக மிக முக்கியமான நபராகிறார். இப்படிப்பட்ட சிக்கல்கள் நிறைந்த நிலையில் வாழ்ந்தும்கூட, பாண்டியன் மிகவும் நம்பகத்தன்மையுடனும் துல்லியமாகவும் பல்வேறு தளங்களில் எழுதி வெளியிட்டுவந்தார். பொருளாதார வரலாறு, சாதி அரசியல், திரைப்படம் மற்றும் மக்கள் செல்வாக்கு, கீழ்நிலைமாந்தர் வாழ்க்கைநிலை, தேசியம் என்று அவரது பணித்தளங்கள் விரிகின்றன. இடர்ப்பாடுகள் வந்தபோதும், எந்தச் சிறப்பான வாய்ப்புகளையும் பெற முடியாதவர்கள் கூட

முதல்தர ஆய்வுகளைச் செய்யமுடியும் என்பதை நம்பவைத்துச் சென்றிருக்கிறார். இந்த முன்னுதாரணமே, நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன்.

அவரது பணிக்குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளதுபோலவே, அவரது முதன்மையான ஆய்வுகளில் காஷ்மீரும் இருந்தது. கடந்த நான்கு வருடங்களில் காஷ்மீர் பற்றி மிக அதிகமாக வாசித்தார். அடுத்த கல்விப்பருவத்தில், 'மாற்று வரலாறு' வகுப்பில் அதை விரிவாக அறிமுகப்படுத்துவதற்கு எண்ணியிருந்தார். எனக்குத் தெரிந்தவரையில், CHS-ல் காஷ்மீர் குறித்து ஆய்வு செய்த பெரும் பாலான மாணவர்களுக்கு ஆய்வு மேற்பார்வையாளராக இருந்தது அவர்தான். அவரது எழுத்துக்கள் அவரைப் பிரதிபலிக்கக் கூடியவையாக இருந்தன. சிறிதும் விட்டுக் கொடுக்காது அலசி ஆராயப்பட்டவை; அதேநேரம் இலகுவாக எளிதில் விளங்கக் கூடியவை. பலருக்கும் புரியாத மொழிநடையில் எழுதப்படும் சூழல் இருக்கிற இக்காலகட்டத்தில், பாண்டியன் போன்று வெகுசிலரே இப்படி எளிமையாக எழுதக்கூடியவர்கள். மற்றவர்களைப் போல விசய தெளிவு இருந்தது. அதை, சூழலுக்கு ஏற்ப எளிதில் வாசிக்க முடிகிற வகையில் எழுத்தில் கொண்டுவரும் திறமை மற்றெல்லாரைக் காட்டிலும் பாண்டியனுக்கு அதிகம் இருந்தது.

சுயநலத்தால் உந்தித் தள்ளப்பட்டு நம்பகத்தன்மையற்ற சூழல் நிறைந்த ஒரு காலகட்டத்தில் அவரது இறப்பு நிகழ்ந்தி ருக்கிறது. எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும், பிரச்சினைகள் நிறைந்த ஒரு காலகட்டம் இது. கடந்த ஒன்றரை ஆண்டுகாலம் மிகக் கடுமையானதாகவும் வலிமிகுந்ததாகவும் இருந்திருக்கின்றது. எனது சகோதரியின் கணவரது இறப்பில் ஆரம்பித்து, பாண்டியன் அவர்களின் இறப்பில் ஒரு அறிவார்ந்த வழிகாட்டியை, இதமான நண்பனை, மற்ற கல்வியாளர்களைப்போல் அல்லாது கவனிப்பும் இரக்ககுணமும் படைத்த ஒருவரை இழந்திருக்கிறேன். நான் விரும்புவதெல்லாம், இன்னும் சில ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக் கலாம் என்பதே. எம்.எஸ்.எஸ். உங்களைப் பிரிந்து மிகவும் வருந்துகிறேன்!

*(இட்ரீஸ் காந்த் தற்போது நெதர்லாந்தில் இருக்கும் 'லெய்டன் பல்கலைக் கழகத்தில்'(University of Leiden) மானுடவியல் துறையில் தன்னுடைய ஆய்வு பணியை மேற்கொள்கிறார். 'ரௌட்லெட்ஜ்' (Routledge) எனும் பத்திரிகையில் 'அரசியல், மதம் மற்றும் கருத்தியல் கோட்பாடு' பகுதி ஆசிரியராகவும் இருக்கிறார்.)*

# "வாழ்ந்து காட்டிய மனிதன்"

– **விடுதலை இராசேந்திரன்,** பொதுச் செயலாளர், தி.வி.க

எம்.எஸ்.எஸ். பாண்டியனின் மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த அனுபவங்களை உணர்வுடன் பகிர்ந்து கொண்டதைப் போன்ற வாய்ப்புகள் எனக்குக் கிடைக்கவில்லை. அறிவுஜீவிகள் பலரோடு பாண்டியன் முரண்பட்டு, நின்றதைப்போன்ற சூழல்களையும் நான் அவரிடம் எதிர்கொண்டது இல்லை. ஒரு உணர்ச்சியுடைய பெரியாரிஸ்டாக சமதளத்தில் நின்று உணர்வுகளைப் பகிர்ந்து கொண்ட அந்த தருணங்கள் மட்டுமே நெஞ்சில் நிழலாடுகிறது. பாண்டியன் துணைவியாரிடம் உரையாடியபோது பாண்டியன், மாணவர் களோடு நெருக்கமாக இருந்தார் என்பதையும் தாண்டி, அவரே ஒரு மாணவராக மாறிப் போய்விட்டார் என்றார். அதனால் தான் ஒரு நள்ளிரவில் 'தார் டப்பாவை' தூக்கினார். மோடி ஆட்சி இந்தியைத் தீவிரமாகத் திணிக்கும் முயற்சிகளில் ஒரு பகுதியாக ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அறைகளின் பெயர்ப் பலகைகளும் இந்தி எழுத்துகளாகின. தன்னுடைய அறையில் இடம் பெற்றிருந்த தனது பெயரை, பாண்டியன் தார் கொண்டு தானே அழித்தார். இது ஒரு 'போராட்ட வடிவம்' என்பதை உணர்த்த வேண்டும் என்பதற்காக பாதியளவுக்கு தார் கொண்டு மறைத்து, பாதியளவு அந்த இந்தி எழுத்துகள் தார் அழிப்பில் மறைந்திருக்க வேண்டும் என்று விட்டிருந்தார். சர்வதேச பல்கலைக் கழகங்களில் பாடம் நடத்தக் கூடிய ஆற்றல் நிறைந்த ஒரு பேராசிரியர் தனக்குள்ளே ஒரு உணர்ச்சிமிக்க செயல் துடிப்பாளன் என்ற உணர்வையும் அழிந்து விடாமல் காப்பாற்றியே வந்தார். இதுதான் பாண்டியனையும் என்னையும் நெருக்கமாக இணைத்திருந்த புள்ளியாக இருந்திருக்கும் என்று நான் உணருகிறேன். பாண்டியன் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தத் திரண்ட மாணவர்களின்

அதிக எண்ணிக்கை அவர் மீது மாணவர்கள் கொண்டிருந்த ஈர்ப்பைக் காட்டியதாக பலரும் கூறினார்கள். அந்த மாணவர்களில் சிலர் மலர் வளையம் வைப்பதைவிட மிகச் சரியான மரியாதையை பாண்டியனுக்கு செலுத்தினார்கள். பாண்டியன் அறையில் மட்டுமே அவரால் தார்பூசி அழிக்கப்பட்டிருந்த இந்திப் பெயர்ப் பலகை அனைத்து பேராசிரியர்களின் பெயர்ப் பலகைக்கும் விரிவுபடுத்தி விட்டார்கள். அனைத்து இந்தி எழுத்துகளும் அவரது மாணவர்களால் அன்று அழிக்கப்பட்டது. மாணவர்களிடம் பாண்டியன் கொண்டிருந்த உறவுக்கான நெருக்கமும் எங்களை இணைத்திருந்த அந்த உணர்வுகளைப் போன்றதே இருந்திருக்கிறது.

இத்தாலி நாட்டின் மார்க்சிய அறிஞர் கிராம்ஷி, 'அறிவாளிகளை' இரண்டு வகைப்படுத்துகிறார். மரபு வழி அறிவாளிகளாக தங்களை அடையாளப்படுத்துவோர் ஒரு வகை. இவர்கள் எந்த ஒரு வர்க்கத்துடனும் தங்களை பிணைத்துக் கொள்ளாமல் சுதந்திர சிந்தனையாளர்களாக உலா வந்தவர்கள். மற்றொரு வகை அறிவாளிகள், சமுதாயத்தின் குறிப்பிட்ட வர்க்கத்துடன் உடலின் உறுப்புகளைப்போல் தங்களை பிணைத்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் அவயவ அறிவாளிகள் அல்லது அங்கத அறிவாளிகள் என்று தமிழில் அடையாளப் படுத்தப்படுகிறார்கள்.

கிராம்ஷி - இதற்குப் பயன்படுத்திய சொல் Organic Intellectuals தமிழ்ச் சமூகச் சூழலில் இத்தகைய அங்கத அறிவாளிகள் உருவாவதற்கு 'பார்ப்பனிய விலக்கம்' (De-Brahminisation) என்பதே - அடிநாதமாக இருக்க முடியும் என்றே தோன்றுகிறது. தனது அறிவை - கற்றலை மேட்டிமைப்படுத்திக் கொள்வதும், அதன் பயனை அனைத்துப் பிரிவினரோடும் பகிர்ந்து கொள்ளாமல் தவிர்ப்பதும் உணர்ச்சிளை வெளிப்படுத்தும் உரையாடலை மூடி மறைப்பதும் மனித உறவுகளை 'தகுதி' நிலைக்கேற்ப வரையறுப்பதும் பார்ப்பனியம் கட்டமைத்த 'கவுரவங்களாகவும்' 'சமூக மாண்புகளாக'வும் மாற்றப்பட்டுள்ளன. இவை சமூகத்தில் கட்டமைக்கப்பட்ட 'ஒழுக்க' மரபுகளோடு கைகோர்த்துக் கொண்டிருக்கின்றன.

'அங்கத அறிவு ஜீவி' என்ற கிராம்ஷி வரையறையை, 'பார்ப்பனிய விலக்கல்' என்று கூறுவது பொருத்தமாக இருக்கும் என்றே தோன்றுகிறது. பாண்டியன் தன்னை "பார்ப்பனிய விலக்கலுக்கு" உள்ளாக்கிக் கொண்ட 'அறிவாளர்'.

அதனாலேயே மரபு வழி அறிவாளிகள் நிறைந்த அவைகளில் பாண்டியன் தன்னுடைய அடையாளத்தை தயக்கமின்றி வெளிப்படுத்தி வந்திருக்கிறார்.

ஒரு உதாரணத்தைக் கூறலாம். இராமன் கோயில் கட்டுவது தொடர்பாக அலகாபாத் உயர்நீதிமன்றம், "முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும்" இடத்தைப் பங்கு போட்டுப் பிரித்துக் கொள்ளும் விசித்திர தீர்ப்பை வழங்கியபோது டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலையில் ஆய்வாளர்கள் கூடி விவாதித்தார்கள். பார்வையாளர் வரிசையில் இருந்த பாண்டியனிடம் கருத்து கேட்டபோது அவர் கூறியது இதுதான். இந்தத் தீர்ப்பை வழங்கிய 3 நீதிபதிகளில் ஒருவர் பார்ப்பனர். ஒருவர் பனியா, ஒருவர் முஸ்லீம், இவர்கள் தந்த தீர்ப்புகளை ஆராய்வதற்கு முன் இவர்களின் சமூகப் பின்னணியை ஆய்வுக்கு (Social Audit) உட்படுத்த வேண்டும் என்றார். அரங்கம் அதிர்ச்சியடைந்தது. அதற்குப் பிறகு விவாதங்கள் அந்த திசையிலேயே சென்றதாக அதில் பங்கேற்ற மாணவர்கள் என்னிடம் கூறினார்கள். பாண்டியன் மறைவு செய்தியை அறிந்து, வழமைக்கு மாறாக அந்தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், அவரது அறைக்கு நேராகவே வந்து இரங்கல் தெரிவித்தபோது இப்படி ஒரு அறிஞர் இந்தப் பல்கலையில் இருப்பது தெரியாமல் போய்விட்டதே என்று வியந்தாராம். அவரின் வியப்பு அத்துடன் முடியவில்லை. அவரது அறையை நோட்டமிட்ட அவர் பெரியார் படமே காணவில்லையே என்று கேட்டிருக்கிறார்.

"பெரியார் ஒரு படமல்ல; பாடம்" என்று திராவிடர் இயக்கத்தினர் கூட்டங்களில் பேசி வருவதை பாண்டியன் வாழ்ந்து காட்டியிருக்கிறார், என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டாம். பெண்ணுரிமையை அவர் பேசியதில்லை. தன்னை பெண்ணுரிமையாளராக அடையாளப்படுத்திக் கொண்டதும் இல்லை. ஆனால் வாழ்ந்து காட்டினார். குடும்பத்தில் சமையலறை பொறுப்பு அவருடையதுதான்! அதை அவர் விரும்பி ஏற்றுக் கொண்டார். "வண்ணவண்ணமான காய்கறிகள், உணவு தயாரிப்பில் வீசும் நறுமணம், இவையெல்லாம் ஒரு சுகமான அனுபவம், ராஜேந்திரன்" என்று என்னிடம் கூறுவார். காய்கறிகளை வெட்டுவதற்கு அழகான பிடிகளைக் கொண்ட கத்திகள் அவருக்குப் பிடிக்கும். வெளிநாடு சென்று திரும்பி வரும்போது இந்த கத்திகளையும் காய்கறிகளை செதுக்கும் சின்னச்சின்ன கருவிகளையும் வாங்கி வந்து நினைவுப் பரிசுகளாக தருவார். அதேபோல் மைபோட்டு எழுதும் பேனாக்களை மிகவும் நேசிப்பவர். பேனாக்களை வகை வகையாகப் பயன்படுத்துவார். "கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு" என்று ஒரு வழக்கமான சொற்றொடர் உண்டு; பாண்டியன் என்ற பார்ப்பன கட்டுடைப்பாளர் கத்தியையும் தீட்டினார்; புத்தியையும் தீட்டினார்.




கணியூர் தமிழ்ச்செல்வன்

# முத்தப்புரட்சி தொடரும் போராட்டங்கள்

கோழிக்கோட்டில் கடந்த டிசம்பர் 7 ஆம் நாள் திட்டமிட்டபடி முத்தப்போராட்டம் தொடங்கியது. நூற்றுக்கும் மேற்பட்ட முத்தப்போராட்டக்காரர்கள் ஹசீப், ராகுல் பசுபாலன், ரெஷ்மி நாயர் தலைமையில் கோழிக்கோடு பேருந்து நிலையம் அருகே பலூன்களுடன் சரியாக 2:30 மணியளவில் கூடினர். கூடியபோதே அந்த இடத்திலிருந்து காவல்துறையினரால் உடனடியாக அப்புறப்படுத்தப் பட்டனர். ஆனால், அவர்கள் அங்கேயே, காவல்துறையினரின் முன்பாகவே, கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து தங்கள் போராட்டத்தைத் தொடங்கினர். போராட்டக்காரர்களை காவல்துறையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து வாகனத்தில் ஏற்றும் தருவாயில் சிவசேனா மற்றும் ஹனுமன் சேனா தொண்டர்கள் தாக்குதலில் இறங்கினர்.

முத்தப் போராட்டம் வன்முறைக்கு ஆளானது. சிவசேனா மற்றும் ஹனுமன்சேனா தொண்டர்களால் போராட்டக்காரர்கள் நகரின் பல்வேறு இடங்களில் தாக்கப்பட்டார்கள். இதில், எழுத்தாளர் தீதி தாமோதரன், இயக்குனர் கே.பி.சசி மற்றும் பல இளைஞர்கள் காயப்பட்டார்கள். ஹனுமன் சேனா தொண்டர்கள் பேருந்து நிலையத்தின் மேற்குப் பக்கமாக வரும்போது காவல்துறையினரால் தடுக்கப்பட்டார்கள். அதேபோல், முத்தப்போராட்டக்காரர்களின் மற்றொரு குழு பேருந்து நிலையத்தின் முன்புறமாக போராட்டத்தை நடத்தினர். பிறகு அவர்களையும் காவல்துறையினர் கைது செய்தார்கள்.

முத்தப் போராட்டக்குழுவின் முன்னணி ஒருங்கிணைப்பாளர் ஷரீப் கூறுகையில், காவல்துறையினர் வலதுசாரி இயக்கத்தினரை விட மிக மோசமாக நடத்து கொண்டார்கள். எங்கள் மீது ஹனுமன் சேனா தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்புகளை காவல் துறையினரே வாரி வழங்கினார்கள். மேலும், அனைத்து உதவிகளையும் செய்தார்கள். ஆனாலும், எங்களின் முத்தப் போராட்டம் 3வது கட்டம், 4வது கட்டம் எனத் தொடர்ந்து நடைபெறும்.

இப்போது எஸ்.எம்.தெருவுக்கு காட்சி மாறுகிறது. அங்கே கே.பி.லிஜு குமார் மற்றும் தீபக் நாராயணன் தலைமையிலான 3வது குழு சிவ சேனா தொண்டர்களை எதிர் கொண்டது. அங்கே போராட்டக்காரர்களும், சிவ சேனா தொண்டர்களும் சுமார் 25 நிமிடங்கள் மோதிக்கொண்டார்கள். அதைக் காவல்துறை மவுன சாட்சியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

**பாசிசத்திற்கு எதிரான இந்தப் பண்பாட்டுப் போராட்டக்குழுவின் நியாயங்களுக்கு வலுசேர்க்கும் விதமாக இக்குழுவுக்கு, நரேந்திர தபோல்கர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் டிசம்பர் 27 இல் பாலக்காட்டில் நடைபெற உள்ள ஒரு விழாவில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடி மறைந்த நரேந்திர தபோல்கர் விருது வழங்கப்பட உள்ளது.**



எஸ்.எம். தெருவில், தீதி தனது கணவர் பிரேம்சந்தை கட்டியணைத்து முத்தம் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பின் பக்கமாக தாக்கப்பட்டார். சசி அவர்கள் போராட்டம் குறித்து பேசி முடித்தவுடன் முரட்டுத்தனமாக நடத்தப்பட்டார். அதேநேரம் கோழிக்கோடு பல்கலைக்கழக மாணவர்கள் தம்பட்டி மற்றும் ரஜீஷ் இருவரும் மாநகர காவல்துறை தலைமை அலுவலகம் முன்பாகவே கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். பிறகு அவர்கள் இருவருமே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்கள்.

காவல்துறையினர் 24 சிவசேனா மற்றும் ஹனுமன்சேனா தொண்டர்களையும், 76 முத்தப் போராட்டக்காரர்களையும் கைது செய்தனர். இதுகுறித்து மாவட்ட காவல்துறை தலைமை அதிகாரி ஏ.வி.ஜார்ஜ் கூறுகையில், “நடந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் இருதரப்பினர் மீதும் வழக்குகள் பதியப்படும். மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட முத்தப் போராட்டக்காரர்கள் மீது எந்த வழக்கும் பதியப்படவில்லை” என்றார். இப்போராட்டம் குறித்து போராட்டக்குழுவினர் பத்திரிகையாளர்களிடம் பேசியவை:

“கோழிக்கோடு நகர வீதிகளில் நடந்த முத்தப்போராட்டம் காட்டுமிராண்டி காவல்துறையினரையும், ஹனுமன்சேனா (குரங்குப்படை) தொண்டர்களையும் எதிர்கொண்டது. காவல்துறை குரங்குப் படையினருடன் இணைந்து மிகக் கடுமையாக முத்தப்போராட்டக்காரர்களைத் தாக்கி இருக்கிறார்கள். அவர்களைப் பிடித்துத் தரதரவென இழுத்திருக்கிறார்கள். போராட்டத்தில் பங்கெடுத்த பெண்களின் ஆடைகளைஅவிழ்க்க முயற்சித்திருக்கிறார்கள்.

எங்களுடைய போராட்டக்குழுவினர் மூன்று குழுவாகப் பிரிந்தோம். முதல்குழு காவல்துறை யினராலும், குரங்குப் படையினராலும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். காவல் துறையினர் நியாயமாக நடந்து கொள்ளவில்லை. குறிப்பாக ராகுல்.பி.வி. என்ற அதிகாரியும், கோழிக்கோடு கமிஷனர் அலுவலகத்திலிருந்து வந்த 2 அதிகாரிகள் குரங்குப்படையினரைப் போல் நடந்து கொண்டார்கள். எங்களுடைய செயற்பாட்டாளர் ஷபிக் அவர்களுக்கு தண்ணீர்கூட கொடுக்காமல், கடுமையாகத் தாக்கினார்கள்.

மற்ற இரண்டு முத்தப் போராட்டக் குழுவினரும் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். மூன்றில் ஒரு குழுவினர் தாக்கப்பட்டு, தரதரவென இழுத்து காவல் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அந்த இடத்தில் காவல்துறையினரே, கலாச்சாரக் காவலர்கள் போல போராட்டக்காரர்களை அடிக்கவும், ஆடைகளைக் களையவும் செய்தார்கள். அதில் ராகுல்.பி.வி. என்ற அதிகாரி, உங்களது அம்மாவையும், சகோதரிகளையும் போராட்டத்துக்கு அழைத்து வர வேண்டியதுதானே! என்று ஹனுமன்சேனாவைச் சேர்ந்தவர்போல பேசினார்.

ஷபீக் என்ற எங்களது முன்னணிப் போராட்டக்காரர், தரதரவென இழுத்துச் செல்லப்பட்டு மணிக்கணக்கில் தாக்கப்பட்டார். காவல்துறையினரால் தாக்கப்பட்டு சோர்வடைந்து, மயங்கிய போராட்டக் காரர்களுக்கு தண்ணீர்கூடத் தர மறுத்தனர். எங்களுடைய போராட்டத்தை தங்களது படையையும், அதிகாரத்தையும் வைத்துத் தோற்கடித்துவிடலாம் என்று முட்டாள்தனமாக நம்பிவிட்டார்கள்.



மற்ற இரண்டு குழுக்களும் தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்தப் போராட்டம் வெற்றியடையப் போவது உறுதி. 'அன்பு' அனைத்துவிதமான அடக்குமுறைகளுக்கும், அதிகாரத்துக்கும் எதிராக நடைபோட்டு, முத்தங்களின் மூலம் வெற்றிக் கொடியை உயர்த்தும். இந்தப் போராட்டம் கட்டாயம் வெற்றியை நோக்கி நடைபோடும். ஏனெனில் இது ஒரு உண்மையான போராட்டம்'' என்று கூறியுள்ளனர்.

டிசம்பர் 7 இல் காட்டுமிராண்டிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிய போராட்டக்காரர்கள், எவ்வித அச்சமும், தயக்கமும் இல்லாமல் அடுத்தகளத்திற்கு ஆயத்தமானார்கள். திருவனந்தபுரத்தில் சர்வதேச திரைப்பட விழா நடைபெறும் கைரளி வளாகத்தில் உள்ள நிலா, ஸ்ரீ திரையரங்குகளுக்கு முன்னால் டிசம்பர் 13 இல் கூடுவோம். பாசிசத்திற்கு எதிரான முத்தப்போராட்டம் அங்கும் நடைபெறும் என முகநூல்களில் அறிவிப்பு செய்தனர். திருவனந்தபுரத்திலும் நூற்றுக்கணக்கில் காவல்துறையினர் முகாமிட்டிருந்தனர். அரங்கிற்கு வெளியே தடுப்புகளும், சோதனைகளும் கடுமையாக இருந்தன. வருண், வஜ்ரா போன்ற கலைப்பு வாகனங்களும் அணிவகுத்து நின்றன. அனைத்துக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து சர்வதேச திரைப்பட விழா அரங்கின் முன்பாக முத்தப் போராட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது.

பாசிசத்திற்கு எதிரான இந்தப் பண்பாட்டுப் போராட்டக்குழுவின் நியாயங்களுக்கு வலுசேர்க்கும் விதமாக இக்குழுவுக்கு, நரேந்திர தபோல்கர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் டிசம்பர் 27 இல் பாலக்காட்டில் நடைபெற உள்ள ஒரு விழாவில் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடி மறைந்த நரேந்திர தபோல்கர் விருது வழங்கப்பட உள்ளது.

**அடுத்தகளம் ஆலப்புழை....**

அமித்குமார்
தமிழில் நிர்மல்குமார்

# பார்ப்பன ஆதிக்கம் நிறைந்த ஆய்வுலகத்தில் பாண்டியனை இழந்து அனாதைகளாக நிற்கிறோம் !



"நான் ஒரு வரலாற்று ஆய்வாளனாக வரலாறு எழுதுகிறேன். அதேசமயம் ஒருகுடிமகன் என்கிற முறையில் அரசியல் விமர்சகனாகவும் செயல்படுகிறேன். ஒன்றை விட்டுவிட்டு இன்னொன்றைச் செய்ய வேண்டியதில்லை. சிலசமயங்களில், இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று குறுக்கிடலாம் அல்லது குழப்பங்கள் தோன்றலாம். ஆனால் அவை ஒரு பொருட்படுத்தத்தக்க பிரச்சனை அல்ல. எளிதில் சரிசெய்து கொள்ளக்கூடிய நடைமுறைச் சிக்கல்கள்தாம் அவை."- இ.பி.தாம்சன்

பிரித்தானிய வரலாற்றறிஞர்,அரசியல் செயல் பாட்டாளர்

தாம்சனின் இந்த வார்த்தைகளுக்கு பேராசிரியர் பாண்டியனைத்தவிர வேறு யார் பொருத்தமானவராக இருக்க முடியும்? வரலாற்று ஆய்வாளராகவும் அரசியல் விமர்சகராகவும் மாறிமாறிச் செயல்பட நேர்ந்த போதிலும் இந்த இருபாத்திரங்களையும் எந்த முரணும் இல்லாமல் அவரால் வகிக்க முடிந்தது.

அவரின் இந்தப்பண்பு அரசியலுக்கும் வரலாற்று ஆய்வுத்துறைக்கும் இடையே தடையில்லாத கருத்துப் பரிமாற்றம் நடைபெறவழிவகுத்தது. அவரைப் பொருத்தமட்டில் தீவிர அரசியல் என்பது வீதிகளிலோ தொழிற்சாலைகளிலோ மட்டும் நடைபெறுவதில்லை, மாறாக அவர் வகுப்பறைகளை வெளியில் நடக்கும் அரசியலின் நீட்சியாகவே மாற்றியிருந்தார். 2009 ஆம் ஆண்டு முதுகலைபடிப்பின் கடைசிப் பருவத்தில் ஒரு கருத்தரங்கில் பேச நான் தேர்ந்தெடுத்த தலைப்பு "காஷ்மீரியக்கிளர்ச்சி" இந்தத் தலைப்பு சம்பந்தமாக வரலாற்று ஆய்வுமையத்தின் மூன்று பேராசிரியர்களை அணுகியபோதும், அவர்கள் எதோ ஒரு காரணம் சொல்லி தலைப்பை மாற்றச்செய்வதிலேயே குறியாக இருந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் பேராசிரியர் பாண்டியனின் அறிமுகம் கிடைத்தது. எனக்கு முன்னரே அறிமுகம் இல்லை. அவரும்பல்கலைகழகவளாகத்துக்குபுதிது.இருந்த போதிலும்அவர் ஒரு "கலகக்காரச் சிந்தனையாளர்" என்று அறியப்பட்டதால் அவரை அணுகினேன். எந்தவிதக் கேள்விகளுமின்றி தலைப்பை ஒட்டிய தரவுகளைத்தேட பரிந்துரைத்தார். அன்று தொடங்கியஉறவு அவரது உயிரற்ற உடலை வண்டியில் ஏற்றிய கணத்தில் முடிவுக்கு வந்தது. ஆனால் உடல் அழிந்தாலும் கருத்தியல் சார்ந்த அன்பும் மரியாதையும் போற்றுதலும்மிக்க உறவுகள் அழிந்துவிடுவதில்லை.

தனிப்பட்ட உறவுகள் சார்ந்த விடயங் களைத் தவிர்த்துவிட்டு பாண்டியன் அவர்களைப் பற்றி எழுதுவது மிகவும் கடினம். சுயசிந்தனையாளர், சிறந்த ஆசிரியர் என்று பலபரிமாணங்களில் அறியப்பட்டாலும், எனக்கும், அவரின் விருப்பத்திற்குரிய மாணவன் பயஸ் எ. தாருக்கும் அவர் எல்லாமாக இருந்தார். நேற்று நாங்கள் எங்களை அனாதைகள் என்று கூறிக்கொண்டோம். பார்ப்பன மேலாதிக்கம் நிறைந்த இந்தக்கல்வித்துறையில், பாண்டியனைப் போன்ற ஒருவரை இழந்து நாம் எல்லோருமே அனாதைகளாக ஆகிவிட்டோம் என்பதுதான் உண்மை. எனக்காகப் பரிந்துரைக்கடிதங்கள் எழுதுவதாகட்டும், எனது ஆய்வறிக்கையைத் திருத்தம் செய்வதாகட்டும், சொந்தவாழ்க்கை அரசியல் நிலைப்பாடுகள் என அனைத்திலும் பாண்டியன் எப்போதும் எனக்கு உறுதுணையாக இருந்தார்.

பாண்டியன் எப்போதும் நமக்காக இருந்தார்.

**தேசியம், தேசியவாதம் என்பது இருமுனைகளிலும் கூரானகத்தி. தேசியவாதம் சிலரை உள்ளடக்கி பலரை வெளியேற்றுகிறது தேசிய எல்லைகளைக் கடந்து சிந்திக்கத் தூண்டியவர் பாண்டியன் அதை நடைமுறையில் கடைப்பிடிப்பதே அவருக்குச் செய்யும் மரியாதை.**

எளிதாக தொலைபேசியில் அழைத்து பேசக்கூடிய இடத்திலோ, நேரில் சென்று பார்க்கக்கூடிய தூரத்திலோ இருந்தார். நாம் எழுதுவதை வாசிப்பதற்கு, வாசித்துவிட்டு கருத்துச்சொல்வதற்கு மக்கள் இருக்கிறார்கள், சொந்தப் பிரச்சனையில் ஆலோசனை சொல்வதற்கு நண்பர்கள் இருக்கிறார்கள், அரசியல் கருத்துகளில் குழப்பங்களைத் தீர்த்து வைப்பதற்கு தோழர்கள் இருக்கிறார்கள். ஆனால் பாண்டியனைப் போல நாம் பேசுகின்ற அபத்தங்களைக்கூட அப்படி நாம் எத்தனைமுறை பேசினாலும் அக்கறையுடன் கேட்பதற்கு நேரமும் பொறுமையும் கொண்ட ஆட்கள் கிடைப்பார்களா என்பது சந்தேகமே.

பாண்டியனைப் போல இன்னொருவர் உற்றதோழனாக மாணவர்களுடன் நேரத்தைச் செலவிட முன்வருவார்களா? என்பதும் சந்தேகமே. நீதியும் சமத்துவமும் வெற்று வார்த்தைகளாகின்ற இன்றைய சூழலில் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் மாணவர்களுக்கான அவரின் அன்பு அளப்பரியது. அவர்களுக்காக செலவிட பாண்டியனுக்கு எப்போதும் நேரம் இருந்தது.. கருத்தியலாகமட்டும் இல்லாமல் நடைமுறையிலும் இந்த உணர்வையும் அக்கறையையும் அவரிடத்தில் காணமுடிந்தது.

தனிப்பட்ட முறையிலும் அரசியல்தளத்திலும் ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களுக்கு பேராசிரியர் பாண்டியனின் இழப்பு ஈடுசெய்வதற்கு மிகவும்கடினமானது. சமூகநீதி, சமத்துவம் போன்ற அவரின் கொள்கைகள் நெருங்கிய நண்பர்கள், அமைப்புகளிடம் இருந்தே அவருக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது.

NCERT பாடப் புத்தகத்தில் வந்த அண்ணல் அம்பேத்கர் பற்றிய கேலிச்சித்திரம் தொடர்பான பாண்டியனின் விமர்சனத்தைப்

பலரும் விரும்பவில்லை. அவரின் வார்த்தைகளில் சொல்வதானால் அபத்தமான கருத்துகள் பெரும்பாலான நேரங்களில் மெத்தப் படித்தவர்களிடமிருந்தே வருகின்றன. அவரது அரசியலின் சாராம்சமாக இருந்தது விமர்சனங்களின் மூலமாக மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிடுவதே. அவரது விமர்சனங்கள் சம்பிரதாயமானதோ யாரையும் நம்பிக்கையிழக்கச் செய்வதோ அல்ல . மாறாக அது மிகவும் பொருள்பொதிந்தது. இயக்கங்களை வலுப்படுத்தவும் தனிநபர்கள் படிப்படியாக மேலெழுந்து வரவும் உந்துசக்தியாக இருப்பது.

இன்னும் நன்றாக நினைவில் இருக்கிறது. காஷ்மீர் தேசியவாதம் பற்றிய ஒரு உரையாடலின் போது காஷ்மீர் போராட்டங்களின் தீவிர ஆதரவாளரான பாண்டியன் சொன்னார் "தேசியம்/தேசியவாதம் என்பது இருமுனைகளிலும் கூரானகத்தி. தேசியவாதம் சிலரை உள்ளடக்கி பலரை வெளியேற்றுகிறது". தேசிய எல்லைகளைக் கடந்து சிந்திக்கத் தூண்டியவர் பாண்டியன் அதை நடைமுறையில் கடைப்பிடிப்பதே அவருக்குச் செய்யும் மரியாதை.

கடந்த சில வருடங்களாகக் காஷ்மீரின் வரலாற்றிலும் அரசியலிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார் பாண்டியன். அதுவே என்னையும் காஷ்மீர் வரலாறு தொடர்பாகப் பணியாற்றும் மற்ற மாணவர்களையும் அவரை மிக நெருக்கமாக உணரவைத்தது. இந்தியாவில் பாசிசசக்திகள் எழுச்சி பெறுகின்ற நேரத்தில் முதலாளித்துவக் கல்வியாளர்கள் காஷ்மீர் என்ற வார்த்தையையே உச்சரிக்க அஞ்சிய காலகட்டத்தில் பாண்டியன், காஷ்மீர் முரண்பாடுகளை அவரது வகுப்பறையில் விவாதப்பொருளாக்கினார். அதோடு நின்றுவிடாமல் காஷ்மீரும் வடகிழக்கும் பற்றிய ஒரு பாடத்திட்டத்தை வடிவமைப்பதிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். காஷ்மீரும் வடகிழக்கும் தீவிரவிவாதப் பொருளாக மாறியிருக்கும் சூழலிலும் இந்தியாவின் எந்த ஒரு கல்விநிறுவனமும் இந்த வரலாற்றை பாடத்திட்டத்தில் கொண்டிருக்கவில்லை என்பதால் இதை நாங்கள் மிகவும் எதிர்பார்த்திருந்தோம்.

பேராசிரியர் பாண்டியனின் மறைவு நாங்கள் ஒருவழிகாட்டியை இழந்துவிட்டோம் என்பதோடு முடியவில்லை. .காஷ்மீர் போராட்டம் அதற்கு பங்களிப்பு செய்து கொண்டிருந்த ஒரு தீவிர ஆதரவாளரை இழந்துவிட்டது. எய்ம்ஸ் மருத்துவமனையில் பேராசிரியர் பாண்டியனின் உடல் வைக்கப்பட்டிருந்த போது மாணவர்கள் நண்பர்கள் சகபணியாளர்கள் என பலரும் குழுமியிருந்தார்கள். அந்தக் கூடத்தில் அவர் கற்பித்த துறையை சார்ந்த மாணவர்கள் மட்டுமல்லாது பல்வேறு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்தவர்களும் இருந்தனர். அவருக்குக் கற்பித்தல் என்பது வெறும் சடங்கல்ல அது மாணவர்களை எல்லாவற்றையும் கேள்வி கேட்கத்தூண்டும் ஒரு அரசியல் நடவடிக்கை.

இதில் அவரது நிலைப்பாடுகளையும் கருத்துக்களையும் கேள்விக்குளாக்குவதும் அடங்கும். உண்மையிலேயே அவரிடம் வகுப்பறையில் கற்றதைவிட அவருடன் ஒரு கோப்பை தேநீர் அருந்தும்போதும், புகைக்கும்போதும் கற்றது அதிகம். மாணவர்களின் சொந்த வாழ்க்கைக்கும் பொது வாழ்க்கைக்குமான இடைவெளியை அவர் உடைத்திருந்தார். எங்களைப் பற்றி நண்பர்களைவிட ஒருபடி மேலாக அறிந்து வைத்திருந்தார். அதனால் எங்களுக்கு என்ன சொல்லிக்கொடுக்கவேண்டும், எப்படிச்சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

சமீபத்தில், ஃபயஸ் துணைப் பேராசிரியராக மவுலானா ஆசாத் உருது பல்கலைக்கழகத்தில் பணிக்குச் சேர்ந்தபோது, பேராசிரியர் பாண்டியன் அவனுடைய ஃபேஸ்புக் பக்கத்தில், "சகோதரா, ஆசிரியர் பணியை மிகுந்த அக்கறையோடு எடுத்துக்கொள். உன்னுடைய பணி விதைநெல்லைப் போன்றது. விதைநெல் ஒரு பயிரை தோற்றுவித்துதான் சாகவேண்டும். நீ ஒரு நல்ல ஆசிரியனாய் இருந்தால், நீ மறைந்தாலும் உன்னுடைய பாதிப்புகள் உன் மாணவர்களிடம் இருக்கும்" என்றுஎழுதியிருந்தார்.

சார், உங்களால் விளைவிக்கப்பட்ட பயிர்கள் நாங்கள், நீங்கள் மறைந்தாலும், உங்களுடைய பாதிப்புகள் எங்களிடம் இருக்கும் - எங்களுடைய கல்விப்பணியில், ஆய்வுகளில், அரசியலில், வாழ்க்கையில் எங்களுக்கு வழிகாட்டியும் தோழரும் நண்பருமாயிருந்த உங்களுக்கு விழிகளில் வழியும் கண்ணீரோடு விடைகொடுக்கிறோம்!

# பூப்புனித நீராட்டு விழா



## பண்பாட்டின் அடையாளமா
## நம் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலா

முற்போக்கு அமைப்புகளில் பணியாற்றும் தோழர்களுக்குக்கூட முதல் மாதவிடாய் வெளிப்பாட்டைப் பற்றிய புரிதல் இருப்பதில்லை. அதனால் இந்த பூப்புனித நீராட்டுவிழாவைக் கொண்டாடக் கூடாது என்று தமது வீடுகளில் மிரட்டுவதோடு நின்றுவிடுகிறார்கள். நாம் மிரட்டுவதைவிட அதிகமாக சுற்றத்தினரும், உறவினர்களும் கொண்டாட வேண்டும் என்று மிரட்டும்போது உறவுகளுக்கு அஞ்சி, நமது தோழர்கள் பின்வாங்க நேரிடுகிறது. நாம் பணியாற்றும் அமைப்புகளோ பெரும்பாலும் அரசியல் செயல்பாடுகள் என்ற அளவில் நின்று விடுகின்றன. இன்றைய சூழலில், முற்போக்கு அமைப்புகள் பண்பாட்டுத் தளத்திலும் கூடுதலாகக் கவனம் செலுத்தி தோழர்களை வளர்த்தெடுக்க வேண்டும். என்பதற்கான முயற்சியாக இந்த விளக்கக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

தமிழர் பண்பாட்டு விழாக்களில் ஒன்றாக உரக்கப் பேசப்படும் விழாவாக உள்ளது. இந்தப் பூப்புனித நீராட்டு விழா. ஒரு பெண்ணின் முதல் மாதவிடாயை ஊரையும் உறவையும் கூட்டி பெரும் விழாவாக நடத்தி அறிவிப்பதே இவ்விழாவின் முதன்மை நோக்கமாக உள்ளது. அத்துடன் இந்து மத அடிப்படையிலான தீட்டுக்கழித்தல் சடங்குகளும் இவ்விழாவில் முக்கிய இடம் பெறுகின்றன.

இவ்வாறு முதல் மாதவிடாயை பெரும் விழாவாக கொண்டாடுபவர்களும் சரி, அக்கொண்டாட்டத்திற்கும் ஆளாக்கப்படும் பெண் குழந்தையும் சரி உண்மையில் மாதவிடாயின் அறிவியல் பின்னணியை அறிந்து வைத்துள்ளனரா என்றால், நிச்சயம் இல்லை என்றே சொல்லலாம். ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்ளும் தகுதி மாதவிடாய் வந்த பெண்ணிற்கு வந்து விட்டது என்பதற்கு மேல் பெரியவர்களுக்கு ஒன்றும் தெரிவதில்லை. அக்குழந்தைக்கோ, நேற்று வரை குழந்தையாக உற்சாகமாக சுற்றிக் கொண்டிருந்த நாம் இனி “பெரிய மனுசியாக” இலட்சணமாக, அடக்க ஒடுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை கடந்து ஒன்றும் புரிய வைக்கப்படுவதில்லை. கூடுதலாக திரைப் படங்கள் ஒரு பெண்ணிற்கு முதல் மாதவிடாய் வந்து விட்டாலே அவளுக்கு காதலும் காதல் உணர்வுகள் ஏற்பட்டு விடும் என்று கற்றுத் தருகின்றன. இவை அனைத்தும் எந்த அளவிற்கு அறிவியலுக்குப் புறம்பான அபத்தங்களோ அந்த அளவிற்கு நம் குழந்தையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் உள்ளன என்பதை நாம் புரிந்து கொள்வதில்லை.

தன் உடலில் ஏற்படும் மாற்றங்களை கூட புரிந்து கொள்ள முடியாத ஒரு குழந்தையின் மேல் திணிக்கப்படும் வன்முறையாகவே இந்த பூப்புனித ராட்டு விழாக்களும் அதை தொடர்ந்த மனப்பான்மையும் உள்ளன.

இந்நிலையில் உண்மையில் மாதவிடாய் என்றால் என்ன என்பது பற்றிய அறிவியல் உண்மைகளை பார்க்கலாம். பூப்பெய்தலுக்கான மாற்றங்கள் கர்ப்பப்பை மற்றும் சினைப்பையில் மட்டும் ஏற்படுவதில்லை. மூளையில் இருந்து முகூழசு என்ற ஹோர்மோன் சுரந்து அது மூளையின் அடிப்பகுதியில் உள்ள

பிட்யூட்டரி (ஞவைரவயசல) என்ற சுரப்பியை தூண்டி, அந்த சுரப்பியிலிருந்து சுரக்கும் குளூழ (குடிடடைரடயச ளுவஅரடயவபை ழடிசஅடிநே) என்கின்ற சினைவளர்ப்பு ஹோர்மோனை நேரடியாக இரத்தத்தினுள் சுரந்து விடுகிறது. இந்த ஹோர்மோன் சினைபையினுள் போய் அங்குள்ள திசுவைவைத் தூண்டியதும், உடனே அது, ஈஸ்டிரஜன் (நுளவசடிபநே) என்கின்ற இன்னொரு ஹோர்மோனை உற்பத்தி செய்து விடுகிறது. இந்த ஈஸ்டிரஜன் கர்ப்பப்பையினுள்ளும், சினைப்பையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தும். அதாவது மூளையில் ஒரு பகுதியிலிருந்து வரும் அந்த ஜி.என்.ஆர்.ஹெச் (முகூழசு) ஹோர்மோன்தான் அத்தனை நிகழ்வுகளுக்கும் மூலகாரணம். இது குழந்தையாக இருக்கும்போதே சுரக்க ஆரம்பிக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகிறது. முதலில் அவ்வப்போது குறிப்பாக இரவு மட்டுமே சுரக்கும். பின்பு இடைவெளி குறைந்து அளவு அதிகமாகி 90 நிமிடத்துக்கு ஒரு முறை உதிரத்தில் கலக்கும் அளவுக்கு சுரக்க ஆரம்பிக்கும். அப்போது சினைப்பை வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அதன் போதுதான் முதல் உதிரப்போக்கு ஏற்படத்தொடங்குகிறது

கருப்பையின் இருபுறமும் சினைப்பைகள் உள்ளன. மாதம் தோறும் ஒரு கருமுட்டை சினைக்குழாயின் வழியே கருப்பையை வந்தடைகிறது. கருவாக உருவாவதற்காக அது காத்திருக்கிறது. அதன் பாதுகாப்பிற்காக கருப்பை தனது ஓரங்கள் முழுவதும் ஜவ்வு மெத்தைப் போன்ற ஒரு அமைப்பை உருவாக்குகிறது. 28 நாட்கள் காத்திருக்கும் கருமுட்டை, கருவாக உருவாகும் வாய்ப்புக் கிடைக்காவிடின் கரைந்து வெளியேறுகிறது. அப்படி அது வெளியேறும் போது, அதன் பாதுகாப்பிற்காக கருப்பையின் ஓரங்களில் உருவான ஜவ்வு மெத்தைப் போன்ற அமைப்பும் கிழிந்து வெளியேறுகிறது. அப்படி அது கிழியும் போதுதான் ரத்தப் போக்கும்,

| | |
|---|---|
| 1 | வளர்ச்சி |
| 2 | இரத்த அழுத்தம் |
| 3 | கர்ப்பம் மற்றும் குழந்தைப் பேற்றின்போது, கருப்பையைச் சுருக்குவது போன்ற குழந்தைப்பேறு ஆகியவற்றின் சில கூறுகள் |
| 4 | மார்பக பால் உற்பத்தி |
| 5 | ஆண் மற்றும் பெண்களிடைய பாலியல் உறுப்பு செயல்பாடுகள் |
| 6 | தைராய்டு சுரப்பியின் செயல்பாடு |
| 7 | உணவை சக்தியாக மாற்றுதல் (வளர்சிதைமாற்றம்) |
| 8 | உடலில் நீர் மற்றும் சவ்வூடு பரவல் ஒழுங்குப்படுத்தல் |
| 9 | சிறுநீரகங்களில் நீர் உறிஞ்சப்படுவதைக் கட்டுப்படுத்தும் ADH (ஆன்டிடையூரிடிக் ஹார்மோன்) சுரப்பு |
| 10 | வெப்பநிலை ஒழுங்குப்படுத்தல் |

வலியும் உண்டாகிறது. முழுமையாக அந்த ஜவ்வுப் பகுதி வெளியேறி, கருப்பை சுத்தமாகி, மற்றொரு கருமுட்டைக்காகக் காத்திருக்கத் தொடங்குகிறது.

அப்படி உடலிலிருந்து வெளியேறும் ரத்தமும், ஜவ்வுப் பகுதிகளும், கரு முட்டையும் தீங்கானவை அல்ல. கருப்பைக்குள் ஒரு குழந்தையை பாதுகாக்கும் தன்மை கொண்டவை. ஒரு பெண்ணுக்கு ரத்தம் சார்ந்த நோய் எதுவும் இருந்தால் ஒழிய அவை தீங்கானவை அல்ல.

அறிவியல் வளர்ச்சியற்ற ஆதி மனிதன் காலத்தில் பெண்ணின் உடலில் இருந்து இரத்தம் வெளியேறும் இந்த மாற்றமும், அவள் குழந்தைப் பெற்றெடுப்பதும் ஆணை அச்சத்திற்குள்ளாக்கியது. அதனை பெண் மிக சாதாரணமாக கையாள்வது ஆணுக்கு பெண்ணின் மீது பிரமிப்பை ஏற்படுத்தியது. குழந்தை பிறப்பு என்பது பெண்ணின் இரகசியமாகவே இருந்தது. இதனால் பெண் வணங்கப்பட்டாள்.

குழந்தை பிறப்பிற்கு தானும் தேவை என்பதை ஆண் உணர்ந்த போது, தனக்கு குழந்தை பெற்றுக் கொடுக்கும் ஒரு கருவியாக பெண்ணை ஆண் அடக்கவிழைந்தான்

பெண்ணின் மீதான கரிசனமாக வெளிப்பட்டது அடக்குமுறை. மாதவிடாய் காலத்தில் பெண்ணுக்கு ஏற்படும் உடல், மன சோர்வு ஆணுக்கு தேவையான கருவியாக மாறிப் போனது. அதை காரணம் காட்டி பெண்ணை வலுவற்றவள் என்ற பிம்பத்தை ஏற்படுத்தினான்.

அதுவரை மாதவிடாய் ரத்தப் போக்கை தாங்கியவள் என்பதலாயே வலுவானவளாக கருதப்பட்டப் பெண், தலைகீழ் மாற்றமாக அதன் காரணமாகவே வலுவற்றவளாக முன்னிறுத்தப் பட்டாள்.

பெண்ணும் அதை நம்பும் வண்ணம் தொடர்ச்சியான அழுத்தம் ஏற்படுத்தப்பட்டது.

இந்து மதம் ஒரு படி மேல் சென்று மாதவிடாய் ஏற்படுவதே தீட்டு என்றும் அசுத்தமானது என்றும் சொன்னது. அதில் இல்லாத கிருமிகளை, விஷத் தன்மையை இருப்பதாகச் சொன்னது. ஒரு குழந்தையை பாதுகாக்க உருவாக்கப்பட்டவற்றை விஷத்தன்மை உடையதாக சொல்வது எத்தனை அபத்தமானது?

உலகின் பல பகுதிகளிலும் முதல் மாதவிடாயைக் கொண்டாடும் வழக்கம் இருந்திருக்கிறது. அது அடிப்படையில் தாய்மையைக் கொண்டாடும் பண்பிலிருந்து எழுந்ததாக உள்ளது. ஆனால் இங்கு இந்தக் கொண்டாட்டங்களுக்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உள்ளது.

முதல் மாதவிடாயை ஊரைக் கூட்டி அறிவித்துக் கொண்டாடுவதற்கு வரலாற்ற ரீதியாக இரண்டு காரணங்கள் உள்ளன.

அக்காலத்தில் பெண்ணுக்கு முதல் மாதவிடாய் ஏற்படும் முன்னரே, அதாவது ஒரு பெண், குழந்தை பிறப்பிற்கு தயாராவதற்கு முன்பே மணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்தது. அப்படி மணம் செய்தாலும் அப்பெண் உரிய பருவம் அடையும் வரை பெற்றோர் வீட்டிலேயேதான் இருப்பாள். இந்த நிலையில் முதல் மாதவிடாய் ஏற்பட்ட உடன், ஊரைக் கூட்டி அறிவித்து அப்பெண்ணை கணவன் வீட்டிற்கு அனுப்பும் வழக்கம் இருந்தது. இதற்காக இந்தக் கொண்டாட்டம் ஏற்படுத்தப்பட்டது


அதற்கு அடுத்தக் காலத்தில், பெண்ணிற்கு முதல் மாதவிடாய் வந்து விட்டாலே உடனடியாக மணம் செய்து வைக்கும் வழக்கம் இருந்தது. அண்மைக் காலப் படங்களில் கூட "நான் சடங்காகி இத்தனை வருசமாகிப் போச்சு. இன்னமும் கல்யாணம் ஆகலை" என்ற வசனங்களைக் கேட்டிருக்கலாம். இந்த வழக்கத்தின் காரணமாக, பெண் உரிய பருவம் அடைந்து விட்டதை உலகுக்கு அறிவிப்பதன் மூலம், அவளை மணம் முடிக்க விரும்புபவர்கள் அணுகலாம் என்ற அறிவிப்பே அதில் அடங்கியுள்ளது. அதாவது ஏலத்தில் ஒரு பொருளை விற்பதற்கு முன், அதனை மேடையில் காட்டி, அதன் பெருமைகளை அறிவிப்பது போல, ஒரு பெண் மணமாவதற்கு தயாராகி விட்டாள் என்று அறிவிக்க, அவரை அலங்கரித்து மேடையேற்றி அனைவர் முன்பும் காட்டுவதே பூப்புனித நீராட்டு விழா சடங்காகும்.

தீட்டுக் கழிக்கிறோம், மஞ்சள் நீராட்டி பெண்ணை சுத்தம் செய்கிறோம் என்பதெல்லாம், மாத விடாயைத் தீட்டாக, அசுத்தமானதாக ஒதுக்கி, பெண்ணை அசுத்தமானவளாக குறுக்கி, அடக்கும் ஆணாதிக்க மனவியலின் வெளிப்பாடே ஆகும்.

மேற்கண்ட இரு தேவைகளும் இன்று இல்லாத நிலையில் ஒரு பெண் குழந்தைக்கு ஊரைக் கூட்டி இத்தகைய சடங்கை நடத்துவது என்பது, அவரை ஏலத்திற்கான பொருளாக்கி நாமே நம் குழந்தையை அவமானப்படுத்துவதாகும்.

ஊரைக் கூட்டிச் சொல்லாவிடினும், இதை ஒரு செய்தியாக வெளியே சொல்வதே, என் மகள் திருமணத்திற்கு தயாராகிவிட்டாள் என்ற செய்தியைப் பரப்புவதே ஆகும். 10 12 வயது சிறுமியைப் பற்றி இப்படியான செய்தியை வெளியே சொல்வது எத்தனை மோசமானது? ஆபத்தானது? மனதளவில் இன்னமும் குழந்தையாகவே இருக்கும் அவளை, பருவப் பெண்ணாக சுற்றியிருப்பவர்கள் பார்ப்பதற்கு நாமே தூண்டுவது போலாகாதா? இன்று குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள் அதிகமாகியுள்ள சூழலில் நாமே நம் குழந்தையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தலாமா?

அப்படி நம் குழந்தையைக் கொண்டாட ஒரு விழா எடுக்க வேண்டும் என நினைத்தால், அக்குழந்தைக்கு ஏதேனும் கலைகளை சொல்லித்தாருங்கள். அதில் அவர் சிறப்புப் பெறுவதை விழாவாக எடுங்கள். அல்லது நன்றாக படிக்க வைத்து, அவர் பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்றுத் தேறினால் அதை விழாவாக எடுங்கள். அவ்விழாவில் நீங்கள் பூப்புனித நீராட்டு விழாவிற்கு அழைக்க நினைத்தவர்கள் அனைவரையும் அழைத்துச் சிறப்புச் செய்யுங்கள். அதைவிட்டு நம் குழந்தையை நாமே அவமானப்படுத்துவது பகுத்தறிவுக்கு முரணானது இல்லையா?



ஜாதியற்ற பாலின சமத்துவமுள்ள தமிழ்ச்சமூகம்!
அதுவே இலக்கு!

# புதியகுரல்
# ஐந்தாவது சந்திப்பு நிகழ்வு



பல்துறை சாதனையாளர்களுக்குப் பாராட்டு

'மாதவிடாய்' ஆவணப்பட இயக்குநர் தோழர் கீதாவிற்கு
'சாதனைத்தமிழர்' விருது வழங்கல்

கலை அறப்பேரவை கலைவாணனின் குழந்தைகளுக்கான நிகழ்வு

தோழர் யாழினியின் 'தமிழகத்தின் இசைவரலாறு' பாட்டும் உரையும்

கருத்தரங்கம்:
நீதிக்கட்சி ஆட்சிக்காலம் முதல் அ.திமு.க ஆட்சிக்காலம் வரை
தோழர் செந்தலை கவுதமன் சிறப்புரை

தோழர் சாந்திகுமாரின் 'பாம்புகள்' விழிப்புணர்வு நிகழ்வு

ஆழியாறு அணைச்சுற்றுலா

தோழர்கள் கீதா, இளங்கோவன், உமா, இலக்கியா ஆகியோரின்
பறை நடனம்

டிசம்பர்-27, 28-2014
பொன்மணி திருமண மண்டபம்
அருணா நகர்
நல்லாம்பாளையம் சாலை
கவுண்டம்பாளையம், கோவை

பேருந்து நிறுத்தம்:
கவுண்டம்பாளையம்
மேட்டுப்பாளையம் சாலையில்
பயணிக்கும் அனைத்துப்
பேருந்துகளும் செல்லும்

தொடர்புக்கு:
தோழர் சாந்தகுமார்
98400 67700



## தொடரும் போராட்டங்கள்







# முத்தப்புரட்சி



நல்ல வேளை
நீ.
என் சாதி இல்லை

ஒன்னே முக்கால் அடியில்
காமத்துப்பால்..
மீதியில் நம் காலடி..

தீண்டாமை பெருங்குற்றம்
உதடுகளுக்கு.

இனி
ராம் (RAM) என்றால்
உதடுகள் ஒட்டும்..

*Freedom to Kiss*
*Kiss of Love*

வெளியீடு: சுயமரியாதை கலைப் பண்பாட்டுக் கழகம்

ஆக்கங்கள், விமர்சனங்களுக்கு: காட்டாறு, 1/810, முத்தமிழ்நகர், நத்தம்சாலை, திண்டுக்கல். 624 003 kaattaaru2014@gmail.com